# ஊர்காவல்படை அமைப்பு இறுதிஅறிக்கை

விலை ரூபா 1-00 ★

ஈழநாடு

THE EELANADU

மலர் 24 மாசி 13 ரவி ஆகிர் 30 இதழ் 13

யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 25—2—82

பயிற்சி

வெல்டிங், வயறிங், மோட்டார் இயந்திரவியல்

செய்முறை அறிமுறையுடன் புதிய வகுப்புக்கள் 28-2-82 ஆரம்பம்.

C. E. T.

ஐலன்ட் இன்ஸ்ரிரியூட், 58. ஸ்ரான்லி வீதி, (விகாரைக்கு, சமீபமாக) யாழ்ப்பாணம். (2386)

## அங்கீகாரம் பெற்றது

(கொழும்பு)

அரசாங்கத்திற்கும் கூட்டணிக்குமிடையே நேற்று நடைபெற்ற பேச்சுவார்த்தையின் போது ஊர்காவல்படை அமைப்பது தொடர்பான இறுதி அறிக்கை அங்கீகரிக்கப்பட்டது.

இவ்வறிக்கையை ஒவ்வொரு அரசாங்க அதிபருக்கும் அனுப்பிவைப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

மாவட்ட அபிவிருத்திசபைகளுக்கு அமைச்சுக்களின் அதிகாரங்கள்வழங்குவதுபற்றிஆராய

(8ம் பக்கம் பார்க்க)

---

★ அச்சுவேலி துப்பாக்கிச்சூட்டுச்சம்பவம்:

# 11 இராணுவ வீரர்களும் பிணையில் அனுமதி

# தீர்ப்பு 10-ம்திகதி ஒத்திவைப்பு

## "உடலில் முன்பக்கத்தால் சன்னங்கள் செல்லவில்லை"

### சட்டவைத்திய அதிகாரி சாட்சியம்

(நமது மாவிட்டபுரம் நிருபர் ஜி. இராமநாதன்)

அச்சுவேலி துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் சம்பந்தப்பட்ட பதினொரு இராணுவ வீரர்களையும் தலா இரண்டாயிரம் ரூபா பிணையில் செல்ல அனுமதித்த மல்லாகம் நீதிபதி; தேவையேற்படும்போது நீதி மன்றத்தில் ஆஜராகவேண்டுமென்றும் உத்தரவிட்டார்.

மரணவிசாரணை தீர்ப்பு மார்ச் மாதம் 10-ம் திகதி அளிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

அச்சுவேலி பத்தமேனியில் கடந்த 20ம் திகதி கந்தையா நவரத்தினம் என்பவர் துப்பாக்கியால் சுடப்பட்டு மரணமடைந்திருந்தார். இம் மரணம் தொடர்பான மரணவிசாரணை நேற்று மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் மீண்டும் எடுக்கப்பட்டது.

#### சட்ட வைத்திய அதிகாரி சாட்சியம்

பிரேதபரிசோதனை நடத்திய யாழ். சட்ட வைத்திய அதிகாரி திரு. என். சரவணபவானந்தன் சாட்சியம் அளிக்கையில் கூறியதாவது;

''1983 பெப்ரவரி மாதம் 21ம் திகதி காலமானவரின் உடலைப் பரிசோதித்தேன். அவரை கந்தைய்யா நவரத்தினம் என்று முருகேசு தம்பித்துரை, கந்தையாகுணரத்தினம் ஆகியோர் அடையாளம் காட்டினர்.

''காலமானவரின் உடலின் பின்பக்கத்தில் துவக்கு சன்னத்தால் ஏற்பட்ட 2 காயங்கள் இருந்தன. இவற்ருல் சன்னம் உட்சென்றிருந்தது. உடலின் பின்பக்கத்தில் மேல் முதுகுப்பக்கமாக ஒரு வெளிக்காயமும் இருந்தது. அதன் மூலம் சன்னம் வெளிப்பட்டிருக்க வேண்டும். உடலின் முன்பக்கத்தில் மார்புப் பக்கத்தில் ஒருகாயம் இருந்தது அதனுலும் சன்னம் வெளிப்பட்டிருக்கவேண்டும்.

#### உடலில் பலகாயங்கள்

''உடலின் பின்புறத்திலிருந்து சென்ற உட்காயங்கள் காரணமாக உடலின் பலபகுதிகள் பாதிக்கப்பட்டு உடலினுள் பல காயங்கள் காணப்பட்டன,

''முதலாவது உட்காயம், வலது பக்க குண்டிப் பக்கத்திஞல் உட் சென்று மார்பின் இடது பக்க மேற்புறத்தால் பின்புறமாக வெளிப்பட்டிருந்தது. இரண்டாவது உட்காயம் வலது பக்கத்தோல் பட்டைக்குக் கீழே உட்சென்று இடது பக்க மார்பு ஊடாக வெளிவந்திருந்தது.

#### முன்பக்கத்தால் சன்னங்கள் உட்செல்லவில்லை

''உடலின் முன் பக்கத்தால் சன்னங்கள் எதுவும் உட்செல்ல வில்லை. இடது பக்க மார்பிலிருந்த வெளிக்காயம் மிகவும் பாரதூரமாக இருந்தது அதற்குப் பாவித்த சன்னம் மிகவும் சக்தி வாய்ந்ததாக இருந்திருக்க வேண்டும்.

நீதிபதி: முதலாவது உட்காயத்திற்குக் காரணமான குண்டிப்பக்கத்தால் சென்ற சன்னம் உடலின் முன்பக்கமாகவே வெளியே சென்றிருக்க வேண்டும் ஆனுல் பின்புறமாக வெளியேவரக்காரணம் என்ன?

சாட்சி: சூடுவிழும் போது இறந்தவர் முன்பக்கமாக குனிந்திருக்கலாம். அவர் நிமிர்ந்து நின்றிருந்தால் சன்னம் புன்புறமாகவே வெளியில் சென்றிருக்கும்.

நீதிபதி: 2 வது உட்காயம் பின்புறமாக சென்று முன்புறமாகவே வெளிவந்துள்ளது. ஆகவே அக்காயம் ஏற்படும் போது இறந்தவர் நிமிர்ந்து நின்றிருக்கலாமல்லவா?

சாட்சி: ஆம்.

#### காயங்கள் விபரம்

சாட்சி தொடர்ந்து கூறியதாவது:

(8-ம் பக்கம்பார்க்க)

---

★ நஷ்டஈடு அறிக்கை

## அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டது

(கொழும்பு)

யாழ். வன்செயல்கள் தொடர்பாக திரு. லயனல் பெர்னுண்டோ குழுவினுல் சமர்ப்பிக்கப்பட்ட நஷ்டஈடு அறிக்கையை ஜனுதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன நேற்று அமைச்சரவையில் சமர்ப்பித்தார்.

இதுதொடர்ாக நேற்றைய அமைச்சரவைக் கூட்டத்தில் எவ்வித தீர்மானமும் எடுக்கப்படவில்லை. (இ.வெ)

---

## கருணுநிதிக்கு எழும்பூரில் பெரும் வரவேற்பு

சென்னை, பெப். 24

மதுரையிலிருந்து திருச்செந்தூருக்கு 8 நாட்கள் பாதயாத்திரை மேற்கொண்டுவிட்டு இன்று சென்னை திரும்பிய தி. மு.க. தலைவர் திரு. மு, கருணுநிதிக்கு பெருவரவேற்பளிக்கப்பட்டது.

திரு. கருணுநிதி எழும்பூர் ரயில் நிலையத்திலிருந்து அவரின்இல்லத்திற்கு 3மைல்தூரம் ஊர்வலமாக அழைத்துச்செல்லப்பட்டார்,

தமக்களிக்கப்பட்ட வரவேற்புக்கு திரு கருணுநிதி நன்றி தெரிவித்து உரையாற்றுகையில் ''திருச்செந்தூர் ஆலய தர்மகர்த்தா திரு. சுப்பிரமணியபிள்ளையின் மரணம் குறித்து நீதியை நிலைநாட்ட தமிழ்நாடு முதலமைச்சர் முன்வரவேண்டும். பாதயாத்திரையின்போது ஆதரவளித்தவர்களுக்கும், அதில் என்னுடன் கலந்துகொண்டவர்களுக்கும் நன்றி தெரிவிக்கிறேன்'' என்ருர். (வெ)

---

## காருக்குள் துப்பாக்கி. 'டிக்கி'யில் கார்ச்சாரதி

### கிளிநொச்சியில் பொலிஸார்மீட்டனர்

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி இ. போ. சபை டிப்போவுக்கு அருகாமையில அநாதரவான நிலையில் மீட்கப்பட்ட கறுப்பு நிறக்காரின் 'டிக்கி'யிலிருந்து காரின் சாரதியும் மீட்கப்பட்டுள்ளார்.

இக்காருக்குள், ஆசனத்தின் கீழ், துப்பாக்கி ஒன்றும் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

கொடிகாமத்தைச் சேர்ந்த கார்ச்சாரதி சந்தியாப்பிள்ளை சுவாமிநாதன் பொலிசாருக்கு அளித்துள்ள வாக்குமூலததில் மூன்று நபர்கள் தம்மிடம் வந்து அக்கரா்யன் போக வேண்டும் என்று தம்மிடம் கூறியதாகவும், இடைநடுவில் கார் நிறுத்தப்பட்டு தம்மைக் கட்டி கார் டிக்கியில் போட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி இன்ஸ்பெக்டர் திஸநாயக்கா விசாரணை மேற்கொண்டுள்ளார்'

சாரதி தொடர்ந்து பொலிஸ் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளார். கார் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளது'

மணிவாக்கு

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு; நம்மில் ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வு.

— பாரதியார்.

# நமது நோக்கு

## தோட்டப் பாடசாலைகளில் தொடரும் குறைகள்

பத்து லட்சம் பேர்கள் கொண்ட ஒரு கூட்டம்; அதுவும் இந்தநாட்டுபொருளாதாரத்தின் முதுகெலும்பாக விளங்கும் மக்கட் கூட்டம்; இதுபற்றி 150 வருடங்களாக ஆசைவார்த்தைகள் ஆண்டாண்டு தோறும் பேசப்படுகின்றன.

ஆனுல் இந்த மக்கட் கூட்டம் ஒரு தனித்துவ சமுதாயமாக உருப்பட வேண்டிய அடிப்படைத் தேவைகள் இன்னும் வாய்ப்பேச்சிலும் கருத்தரங்கிலுமே காணப்படுகின்றன,

முன்னைநாள் இந்தியப் பிரதமர் அமரர் நேரு தொடக்கம் இன்று இங்கு வந்துபோன இந்திய ஜனதிபதி சஞ்சீவரெட்டி வரைக்கும் நீங்கள் புகுந்த நாட்டுக்கு விசுவாசமாக இருங்கள் என்ற பழைய வாசகத்தையே புரட்டிப் பேசிவிட்டனர்.

உருப்படியான திட்டங்கள் வாய்ப்பேச்சில் இருப்பதும், வாக்குறுதிகள் காற்றில் பறப்பதும், காலத்துக்குக்காலம் கலவரங்களும் வகுப்புவாதங்களும் எரியும் புண்ணில் வேல் பாய்ச்சியதுபோல் முன்னே செல்லமுயலும் இந்த அப்பாவி மக்களை பலதூரம் பின்னே துரத்திவிடுகின்றன.

மலையே வந்தாலும் தலையே சுமப்போம், எடுத்துக்கொண்ட திட்டங்களை எவ்வகையிலும் நிறைவேற்ற பொறுமை வேண்டுமென்று தம்மாலியன்ற பல நல்ல காரியங்களை அமைச்சர் தொண்டமான் தீவிரமாக நிறைவேற்றுவதில் கண்ணுங்கருத்துமாயிருப்பது உண்மை.

ஆயினும் மலையக மக்களின் உயிர்ப் பிரச்னை, அவர்கள் கோரும் உயிர்ப் பிச்சையென்றும் சொல்லலாம் — அவர்கள் பிள்ளைகளின் கல்வியே!

கடும் உழைப்பாளிகளான தோட்டத் தொழிலாளர் உண்டும் உடுத்தும், குடித்தும் களித்தும் வீண்காலம் போக்கியநிலை கடந்துவிட்டது; விழிப்புணர்வு இவர்களுக்கு உதயமாய், அதிவேகமாய் தொழிற்படத் தொடங்கிவிட்டது.

கல்வித் துறையில் பல்லாண்டுகளாக அவர் பின் தங்கிய நிலையை அவர்கள் இன்று நன்குணர்ந்திருக்கின்றனர்.

மகஜர் தயாரிக்கவும் அவசிய கோரிக்கைகள்விடவும், அவற்றிற்காக நடவடிக்கைகளில் இறங்கவும் துணிவு பிறந்திருக்கிறது.

தோட்டப் பகுதிகளில் பாடசாலைக்குப்போகவேண்டிய பிள்ளைகள் சுமார் இரண்டு லட்சத்து ஐம்பதினுயிரம் பேர்கள். இவர்களில் 79 ஆயிரம் பேர்கள் மட்டுமே பாடசாலைக்குப் போகும் வாய்ப்பினைப்பெற்றிருக்கிறுர்கள். அதிலும் உயர்கல்வி பெறும் சந்தர்ப்பம் பெற்றவர்களை விரல்விட்டு எண்ணலாம். போதிய வசதிகள் அவர்களின் முன்னேற்றம் நாட்டுக்கு நல்லதென்பதை ஆட்சியாளர் உணரவேண்டும்.

அவர்கள் தமிழ்ச்சமூகத்தைச் சேர்ந்தவர்களென்று சந்தேகக் கண்கொண்டு பார்த்து வந்ததாலே இந்த நாட்டுக்கு, அதன்தேயிலைக்கும் றப்பருக்கும் இத்தனை கேடு வந்திருக்கிறதென்பது நிச்சயம்.

தமிழ்ச் சமுதாயத்தைச் சேர்ந்தவராஞலும், தமிழ் ஈழமோ அல்லது நாட்டின் ஒருமைப்பாட்டுக்கு, ஆட்சியாளர் சந்தேகிக்கக் கூடிய அபாய நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்கள் அல்லர்.

அவர்களின் தலைவர் அமைச்சரென்ற முறையில் இச்சமூகம் தழைத்தோங்குவது எந்தஅரசுக்கும் சாதகமாகும்.

நெற்றியின் வியர்வை நிலத்தில் சிந்த உழைக்கும் எவரும் தீய பாதையில், தீங்கு விளைக்கும் திட்டங்களில் ஈடுபடமாட்டாரென்பது திண்ணம்.

எனவே அவர்களை நாட்டின் பிரஜைகளாக, மதிப்புடையமக்களாகக் கணித்து அவசிய கல்வி வசதிகள் வழங்குவதை வேறெவரும் எதிர்க்கத் துணிவது அதர்மம்!

தோட்டக்காட்டு மக்கள் என்ற 'வடு' மக்கள் மனத்திலிருந்து நீங்குவது அவசியம். இன்றேல் ஏழைஅழுத கண்ணீர் நாட்டுக்கு கூரிய வாளாக மாறும்: அது பலவிதத்திலும் தோற்றலாம்- வரட்சி, வெள்ளம், அரசியல் குழப்பம் போன்றஇயற்கை செயற்கை அழிவுகள் எல்லாம் அதர்மத்துக்குரிய தண்டனைகள்.

மலையக மக்களின் குழந்தைகள் கல்வியில்முன்னேற நியாயமான திட்டம் துரிதப்படுத்துவது அவசியம்.

தமிழ்த்தலைவர்கள், கல்விமான்கள் கொண்ட

# கல்வி அபிவிருத்திசபை ஒன்றை நிறுவ வேண்டும்

## தமிழ் மாணவர் கல்வியைப் பாதுகாக்க ஒரு யோசனை

[''இலவசப் புத்தகங்கள், பெறமுடியாமலும் பாடங்களைக்கற்பிக்க ஆசிரியர்களின்றியும் நிரந்தர அதிபர்கள் இன்றியும் தமிழ்ப்பிள்ளைகளின் கல்வி வளர்ச்சி கருகிப்போய்க் கொண்டிருக்கிறது.'']

யாழ். மாவட்ட மாணவர் கல்விநிலை கடந்த சில வருடங்களாகவே பாதிப்படைந்து வருகின்றது. வருடாவருடம் மாணவர் தொகை அதிகரித்தும்— ஆசிரியர் நியமனங்கள் போதியளவு நடைபெறவில்லை கடந்த இரண்டு வருடங்களாக மாணவருக்கு வழங்கப்படும் இலவச பாடநூல் முழுதாக வழங்கப்படவில்லை. அதிபர் நியமனங்களின்றி நூற்றுக்குத் தொன்னூறு வீத பாடசாலைகள் வருடக்கணக்காகவே கைவிடப்பட்டுள்ளன இவற்றை பற்றி சிந்தித்து ஒரு முடிவுக்கு வரவேண்டிய காலம் நெருங்கிவிட்டது.

1981ம் ஆண்டு யாழ் மாவட்டத்தில் நிலவிய ஆசிரியர் பற்ருக்குறை 1982ல் மேலும் அதிகரித்துள்ளது. சமீபத்தில் நடந்துமுடிந்த பரீட்சை மூலம்

- த. சிவபாதம் -

நியமனம் பெறஇருக்கும் தமிழ் ஆசிரியர்கள் தொகையும் இலங்கை முழுவதும் ஆயிரத்து ஐந்நூறு வரையே இருக்குப. யாழ். மாவட்டத்தில் மட்டும் 2000ம் ஆசிரியர் பற்ருக்குறையாக இருக்கும் போது நடைபெற இருக்கும் நியமனமூலம் தமிழ் மாணவர்களின் பிரச்சினை தீர்க்கப்படமாட்டாது.

### புத்தக விநியோகம்

1981ம் ஆண்டு இங்கு விநியோகிக்கப்பட்ட இலவச பாடநூல்களும் அரைகுறையாகவே விநியோகிக்கப்பட்டன, கடந்த ஆண்டு முடியும் வரை 4ம். 5ம் தர மாணவரது தமிழ் கணித நூல்கள் கொடுக்கப்படவில்லை. 1982ல் இரண்டுமாதங்கள் முடியப்போகின்றன, இன்னும்மாணவர்களுக்குத்தேவையான பாடநூல்கள் கிடைக்கவில்லை. ஆரம்ப வகுப்பு மாணவருக்கு இன்னும் கணிதப்புத்தகங்கள் விநியோகிக்கபடவில்லை. ஏனைய புத்தகங்களும் மாணவர் விகிதாசாரத்திலும் அரைப்பங்கு பேருக்காயினும் புத்தகங்கள் கிடைக்கவில்லை. மெற்றிக்முறை அறிமுகப்படுத்தப்பட்ட பின் கணிதப் புத்தகங்களில் மாற்றமிருப்பதால் இப் புத்தகங்கள் வழங்கப்பட வேண்டியது மிக மிக அவசியமாகின்றது மாணவர்கள் பாடநூல்களை அரசாங்கமே பொறுப்பேற்றுள்ளதால் தட்டுப்பாடான நூல்களை அரசாங்கமே பொறுப்பேற்றுள்ளதால் தட்டுப்பாடான நூல்களை புத்தகக்கடையில் பெறவும் முடியவில்லை.

### அதிபர்கள் நியமனம்

1977ம் ஆண்டுக்கு முன்பிருந்தே இலங்கை முழுவதிலுமுள்ள தமிழ்ப் பாடசாலைகளுக்கு அதிபர் நியமனம் நடைபெறவில்லை. யாழ், மாவட்டத்திலுள்ள கல்லூரிகள்.மகாவித்தியாலயங்கள்நிரந்தர அதிபர்களின்றி நடைபெற்று வருகின்றன. கனிஷ்ட வித்தியாலயங்கள், ஆரம்ப பாடசாலைகளுக்கு iv+vந்தர அதிபர்கள் நியமனம் தானும் இன்னமும் நடைபெறவில்லை. 1978ல் பரீட்சையில் சித்தியடைந்து நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்ட iv+vந்தர அதிபர்கள் நான்கு வருடங்களின் பின் திரும்பவும் 1981 கார்த்திகையில் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டனர். அவர்கள் 1982 தை மாதத்திலாயினும் நியமனம் கிடைக்குமென எண்ணி ஏமாந்துள்ளனர்.

ஏற்கனவே வெளிமாவட்டங்களில் கடமையாற்றும் அதிபர்கள் இந் நியமனங்கள் நடைபெருமலிருப்பதால் சொந்த மாவட்டங்களுக்கு மாற்றம் பெற்று வரமுடியாமல் கஷ்டப்படுகின்றனர்.

இலவச புத்தகங்கள் பெற முடியாமலும் பாடங்களைக்கற்பிக்க ஆசிரியர்களின்றியும் நிரந்தர அதிபர்களின்றியும் தமிழ்ப்பிள்ளைகளின் கல்வி வளர்ச்சி கருகிப்போய்க் கொண்டிருக்கின்றது. தமிழ் மாணவர்களுக்குப் பல்கலைக்கழகம்செல்லும்வாய்ப்பு அருகி வரும் இன்றையநிலையில் ஆரம்பக்கல்விக்கும் பாதிப்பேற்பட்டு வருவதைத் தமிழ் பேசும் பெற்ருர் விழிப்படைந்து ஆவன செய்ய முன்வர வேண்டும்,

தமிழ் தலைவர்கள் கல்வி

[7ம் பக்கம் பார்க்க!

## "இலங்கைத் தமிழரின் தனிநாடு போராட்டம்"

### 'வெரித்தாஸ்' வானெலி விமர்சனம்

இலங்கையில் எண்ணிக்கையின் அடிப்படையில் சிறிய இயக்கம் ஒன்று பொருளாதார அடிப்படையில் ஆதரவும் வழமும் குறைந்தது. அரசு ஒடுக்க முனைந்தாலும் தொடர்ந்தும் இயங்கிக் கொண்டிருக்கிறது என்று வெரித்தாஸ் வானெலி நிலையம் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு ஒலிபரப்பிய ''இலங்கைத் தமிழர்களின் தனிநாடு போராட்டம்'' செய்திக் கண்ணேட்டம் நிகழ்ச்சியில் தெரிவித்தது.

இச்செய்திக் கண்ணேட்ட நிகழ்ச்சியில் தெரிவிக்கப்பட்டதின் விபரங்களை எமது கரவெட்டி நிருபர் திரு.ஏ சுபேந்திரன் இங்கு திரட்டித் தருகின்ருர்:

''யாழ்ப்பாணம் சென்று நிலைமையைப் பார்வையிட்ட ராயட்டர் செய்தி ஸ்தாபன செய்தியாளர் ஒருவர் கூறுகிருர் யாழ்ப்பாண நகர் சுவர்களில் எல்லாம் விடுதலைச் சுலோகங்கள் புலிகளின் தாகம் தமிழ் ஈழ தாகம் போன்றன.

அகிம்சையில் நம்பிக்கை கொண்ட தமிழர் விடுதலைக் கூட்டணியும், வன்முறைமூலம் விடுதலைபெறும் நோக்கில் இயங்கும் புலிப்படையும் தான் தமிழ் ஈழ வாசகங்களில் காணப்படுகின்றன.

'காவல்துறையினரோ, பாதுகாப்புப்படையினரோ யாழ். மாவட்டத்தில் சுதந்திரமாகத் திரிய முடிவதில்லை. யார் புலியார் எப்போது தாக்குவார் என்று தெரியாது. என்று அச்சம் தெரிவிக்கிருர் பெயர் குறிப்பிடவிரும்பாத ஒரு தமிழ் பொலிஸ் அதிகாரி.'

ஆனைக்கோட்டை பொலிஸ் நிலையத்தை அவர்கள் தாக்குதல் நடத்தியதை அடுத்து பொலிசாரின் அதிகாரங்கள் சில இராணுவத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டு இருக்கின்றன.

28 பொலிசார் கொல்லப்பட்டுள்ளனர். இவர்களுள் பெரும்பாலானவர்கள் சிங்களவர், அரசில் உயர்பதவி வகித்தவர்களைத் தாக்கிவந்த இவ் இயக்கம் கடந்த கோடை காலததில் இருந்து பாதுகாப்புப் படையினரையும், பொலிசாரையும் தாக்கத் தொடங்கி இருக்கிறது

இத்தகைய சம்பவங்களைப் பழிவாங்கும் நோக்கோடு யாழ்ப்பாணத்தில் வன்முறைகள் தலைதூக்கின. இதனுல் ஈழநாடு பத்திரிகை காரியாலயம், யாழ்ப்பாணம் எம். பி. யோகேஸ்வரனின் இல்லம் முற்றுகச் சேதமடைந்தன.

''இவ் வன்முறையின் கெடுபிடியால்யாழ். பொதுசன நூலகம் எரிந்தது. 9 000 நூல்களை, கையெழுத்துப்பிரதிகள் சாம்பராயின.

''முத்தமிழோடு மோது வாரை.....: விடுதலை என்ன விலை பொருளா ...... என்பன இலங்கைத் தமிழரின் கவிதை வரிகள்''.

''தமிழ் ஈழமும் சிங்கள நாடும் இரு மொழி பேசும் நாடுகள். இந்த நம்பிக்கையில் தன் தமிழர்கள் தமிழ்நாடு கேட்கிருர்கள். புத்தளம், மன்ஞர், யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, வவனியா, திருகோணமலை, பொத்துவில் என்பன தமிழ் ஈழத்தின் பகுதிகளாகும்.

''வளமான மலைநாடும் தென்பகுதியும் சிங்களநாடு.

''கடந்த ஆகஸ்ட் கலவரத்தில் எத்தனையோ தமிழர்கள் தாக்கப்பட்டு நெருக்கடி நிலை ஏற்பட்டது. ''தமிழ் ஈழவிடுதலை இயக்கத்தில் 200 உறுப்பி

(7ம் பக்கம் பார்க்க)

## சமூக சீர்திருத்தத் திருமணம்

13—2—82 ல் 'ஈழநாடு' மக்கள் கருத்துப் பகுதியில்கரவையூர் கவிதரன் சீர்திருத்தத் திருமணம் என்ற தலைப்பில் எழுதிய கருத்து தொடர்பாக அறவழிப் போராட்டக்குழு தனது நிலைப்பாட்டை சித்தரிக்கவேண்டிய கடப்பாடுடையது.

அறவழிப் போராட்டக்குழு தமிழ் சமுதாயத்தில் புரையோடியிருக்கும் சாதி, சீதனக் கொடுமைகளை அகற்றுதல், மனித உரிமைகளைப் பேணுதல், சமூக அநீதிகளைக் களைதல்போன்ற பல்வேறு விடயங்களை அன்புவழியாக அகற்றுவதற்காகப் போராடுகின்ற இயக்கமாகும்.

அன்பு நண்பர் கவிதரன் தனது கருத்தில் சீர்திருத்தத் திருமணம செய்துகொண்ட பலர் பெற்ருேராலும், உறவினர்களாலும் புறக்கணிக்கப்பட்டு, சமுதாயத்தில் எங்கோ ஒரு மூலையில் எவருக்கும் தெரியாமல் முடங்கிக் கிடப்பதாக

### மக்கள் கருத்து

எழுதியிருந்தார். அது உண்மை. சமுதாய மாற்றங் கருதி புரட்சிகரமாக தமது வாழ்வைத் தியாகம் செய்த பலர் எங்கோ ஒரு மூலையில் முடங்கிக்கிடக்கக்கூடாது. அவர்களும் எமது சமுதாயத்தில் ஒரு அங்கம். சுதல்வசப்பட்டு அவர்கள் ஒன்றிணைந்தாலும், சமுதாயத்தில் பலரினுல் அவர்கள் புறக்கணிக்கப்பட்டாலும் சமுதாய அமைப்பில் உயர்ந்த அந்தஸ்தில் முன்னேடிகளாக விளங்குபவர்களின் நல்லாசிகளோடு, அவர்கள் முன்னிலையில் இணைவது அவர்களை வாழ்க்கையில் புதிய எண்ணங்களுடனும், நினைவுகளுடனும், புதிய வாழ்வை உருவாக்க உதவும் என்ற நம்பிக்கையுடனும், தொலைநோக்குடனும் அறவழிப்போராட்டக்குழு இப்படியான திருமணங்களை நடாத்திவருகின்றது.

எவ்வித ஐயப்பாடுமின்றி, இதயசுத்தியோடு நாம் நல்ல வழியில் செல்கின்ருேம் என்ற உணர்வில் செயற்படுகின்ருேம்.

இது மலிவான விளம்பரம் அல்ல. புதுமையை விரும்பும்

(7ம் பக்கம் பார்க்க)

# "சமூக எழுச்சியின் முதற்படி பெண்கள் முன்னேற்றமாகும்"

## பெண்கள் ஆய்வு வட்டத்தின் கண்டனக் கண்காட்சியில் ஜேம்ஸ் இரத்தினம்

(யாழ்ப்பாணம்)

''யாழ்ப்பாணப் பெண்கள் ஆய்வு வட்டம் ஒழுங்கு செய்திருக்கும் இக் கண்காட்சியைத் திறந்துவைப்பதில் நான் பெருமிதமும், மகிழ்ச்சியும் அடைகிறேன். எமது சமூக எழுச்சியின் முதற்படி பெண்களது முன்னேற்றமாகும். இதனை இவர்கள் உணர்ந்திருப்பது வரவேற்கத்தக்கது''.

யாழ்ப்பாணப் பெண்கள் ஆய்வு வட்டத்தினர் ஒழுங்கு செய்திருந்த விளம்பரங்கள் பற்றிய கண்டனக் கண்காட்சியை திறந்துவைத்துப் பேசிய கலாநிதி ஜேம்ஸ் ரி. இரத்தினம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இக்கண்காட்சி திருநெல்வேலியிலுள்ள ஈவ்லின் ரட்ணம் பல் இனப்பண்பாட்டு நிறுவனத்தில் இம்மாதம் பதினைந்தாம் புதினாறும் திகதிகளில் நடைபெற்றது. விளம்பரங்களில் பெண்களை ஆபாசமாகச் சித்தரிப்பதைக் கண்டித்து இக்கண்காட்சி நடைபெற்றது. கலாநிதி ஜேம்ஸ் ரி இரத்தினம் மேலும் தமது உரையில் கூறியதாவது:

''பெரும்பாலான சமயங்களில் இவ்விளம்பரங்கள் ஆபாசமான முறையில் எல்லைகளைத் தாண்டிப் போவதைக் காண முடிகிறது. எமது பெண்களின் பெருமையையும் திறமையையும், புனிதத்தையும் இவ்விளம்பரங்கள் மறுப்பதையும் இழிவு செய்வதையும் நாம் கண்டித்தே யாகவேண்டும். இது சம்பந்தமான உணர்வு பெண்கள் மத்தியிலேயே முதலில் எழுதல் வேண்டும். இதனை இந்த ஆய்வு வட்டம் உணர்ந்திருப்பதைக் கண்டு மகிழ்வடைகிறேன். அவர்களுக்கு எனது பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். பெண்கள் பிரச்னைகள் தொடர்பான அவர்களது ஆய்வுகள் தொடரவும் பணி சிறக்கவும் எனது வாழ்த்துக்கள்,'' என்று கூறினார்.

இக்கண்காட்சியைப் பொது மக்களும் பெரும்பாலான பல்கலைக்கழக மாணவர்களும் சென்று பார்வையிட்டனர்.

# இந்த வதந்திகளுக்கு யார் காரணம்?

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறைப் பகுதியில் நேற்று பகல் பரவிய வதந்தியையடுத்து மக்கள் பரபரப்படைந்த போதும் குறிப்பிடக் கூடிய எதுவும் நடைபெறவில்லை.

ஆயுதபாணிகளாக பொலிசார் காங்கேசன்துறைச் சந்தியில் தரித்து நின்று வாகனங்களை சோதனை செய்து மக்களைக் கலைத்து கடைகளைப் பூட்டுமாறு கூறியதாக ஓர் வதந்தி வெகுவேகமாகப் பரவத்தொடங்கியது.

ஆனால் காங்கேசன்துறைப் பகுதியில் குறிப்பிடக் கூடியதாக எதுவும் இடம்பெறவில்லை. கடைகள் திறந்திருந்தன. மக்கள் நடமாட்டம் இருந்தது.

வதந்தி வேகமாகப் பரவியதால் காங்கேசன்துறையில் என்ன நடக்கிறது என்பதைப் பார்க்கவந்தவர்கள் ஏமாற்றத்துடன் சென்றனர்.

# "இலங்கையை வெல்வது இலகுவாக இருக்கவில்லை"

## பாகிஸ்தானை சிலவேளைகளில் இலங்கை வெல்லலாம்!

### இங்கிலாந்துகாப்டன்பிளெச்சர் கருத்து

(கொழும்பு)

''இலங்கைக் கோஷ்டியை வெல்வது இலகுவாகவிருக்கவில்லை சிறந்த துடுப்பாடி வீரர்களைக் கொண்ட இலங்கைக் கோஷ்டி ஓர் சிறந்த கோஷ்டியாகும்''.

இவ்வாறு இலங்கையின் முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் பந்தயத்தில் வெற்றிபெற்ற இங்கிலாந்து அணியின் காப்டன் திரு. கீத் பிளெச்சர் ஜனாதிபதிக் கிண்ணத்தைப் பெற்றுக்கொண்டு உரையாற்றுகையில் தெரிவித்தார்.

காப்டன் பிளெச்சர் மேலும் உரையாற்றுகையில்; இலங்கைக் கோஷ்டியிடம் சிறந்த துடுப்பாடி வீரர்கள் இருக்கிறார்கள். இலங்கை அணியினர் டெஸ்ட் ஆட்டங்களில்வெற்றியீட்டும் சாத்தியக் கூறுகள் காணப்படுகின்றன. இவர்கள் பாகிஸ்தான் அணியுடன் மோதி வெற்றியீட்டக் கூடிய வாய்ப்புக்களும் இருக்கின்றன'' என்றார்.

ஜனாதிபதி ஜே. ஆர், ஜெயவர்த்தன உரையாற்றுகையில் ''எதிர்காலத்தில் நாம் இங்கிலாந்து அணியினரை வெல்லுவோம். ஆனால் இதற்கு பல வருடங்களும், அனுபவங்களும் எமக்குத் தேவைப்படும். இலங்கையரும் டெஸ்ட் ஆட்டங்கள் பற்றி இன்னும் நிறைய அறிவார்களென நான் நம்புகிறேன்'' என்றார். (கி)

# புராதன ஓவியங்கள் இந்தியாவில் கண்டுபிடிப்பு

புதுடில்லி, பெப். 23

மத்திய பிரதேசத்திலுள்ள செய்சென் என்ற நகரருகே நூற்றுக்கு மதிகமான கற்பாறை ஓவியங்களை இந்திய புதைபொருளாராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

நல்ல நிலையிலிருக்கும் இந்த ஓவியங்கள் சிவப்பு வெள்ளை ஆகிய நிறங்களில் வரையப்பட்டுள்ளன. வேட்டையாடுதல், மீன்பிடித்தல் ஆகியவற்றைச் சித்தரிக்கும் இவை கி. மு. 10ம், 5ம் நூற்றுண்டுகளைச் சேர்ந்தவையாக இருக்கலாம் என்று நிபுணர்கள் நம்புகிறார்கள்.

# விஷக்கிருமி ஆயுதங்களைத் தயாரித்த அமெரிக்க டாக்டர்!

## பாகிஸ்தான் வெளியேற்றியது

ராவல்பிண்டி, பெப். 24

லாகூர் வைத்திய கேந்திரத்தில் வேலைசெய்துவந்த டாக்டர் டேவிட் நெல்லின், நாட்டைவிட்டு வெளியேறும்படி கட்டளையிடப்பட்டுள்ளார். இந்த அமெரிக்க டாக்டரின் தலைமையில், மேற்படி நிலையம் விஷக்கிருமி ஆயுதங்களை தயாரிப்பதில் பரிசோதனை நடத்திவந்ததாக பாகிஸ்தான் பத்திரிகைகள் கிளப்பிய கூக்குரலைத் தொடர்ந்தே அவர் வெளியேற்றப்பட்டார்.

1979ல் எ. மார்ட்டின் எனும் சத்திரசிகிச்சை வைத்தியரும் இரண்டு தாதிமாரும் சடுதியாக இறந்தனர். இதற்குக் காரணம் முன்னெப்பொழுதும் பாகிஸ்தான் கண்டறியாத விஷக்கிருமிகளே என்று நிரூபிக்கப்பட்டது. இதைத்தொடர்ந்து இவ்வுண்மையை ஸ்தாபிக்க ஏதுவாயிருந்த வைத்தியநிபுணர்கள் வேலைநீக்கம்செய்யப்பட்டது புதிராகவிருந்தது.

கடந்தவருடம் லாகூர் ஆய்வுகூடத்தில் அனுமதிக்கப்பட்டிருந்த சில நோயாளிகள் சித்தசுயாதீனமிழந்தனர். ''அன்டிபே'' என்ற மருந்து ஊட்டப்பட்டதைத் தொடர்ந்தே இது நிகழ்ந்தது. மலேரியா எதிர்ப்புக்கு இது அமெரிக்க வைத்தியர்களால் சிபார்சுசெய்யப்பட்டிருந்த போதிலும் பாகிஸ்தான் வைத்திய வட்டாரங்களில் இது பரபரப்பை உண்டாக்கியது.

பாகிஸ்தான் விஞ்ஞானியான பேராசிரியர் பி. லோதி, நாகரிகமுற்ற மேற்கத்திய நாடுகள் வறிய நாடுகளில் விஷக்கிருமிகள், விஷவாயு, ஆயுத தயாரிப்புக்கு பரிசோதனை நடத்துவதையே இது காட்டுவதாகக் கண்டித்திருந்தார்.

''அண்டைநாடுகள் மீது விஷக்கிருமிகளை பரவச்செய்து ஆட்சி கவிழ்ப்பு வேலை நடத்துவதற்கான தயாரிப்புக்காக இது இருக்கலாம்'' என்று ஆசியபத்திரிகைகள் எழுதியிருந்தன. இச்செய்தி அமெரிக்க பத்திரிகைகளிலும் வெளிவந்தது.

இங்கு நடத்தப்பட்ட பரிசோதனையால் 300 பாகிஸ்தானியர்கள் இறந்துள்ளனர்.

## தெல்லிப்பழையில்

# ஆஸ்பத்திரி அபிவிருத்திச் சங்கம் அங்குரார்ப்பணம்

(மாவிட்டபுரம்)

தெல்லிப்பழை அரசினர் ஆஸ்பத்திரியில் நிலவும் குறைபாடுகளை தீர்ப்பதற்கான முயற்சியில் ஈடுபடுவதற்காக ஆஸ்பத்திரி அபிவிருத்திச் சங்கம் ஒன்று இம்மாதம் 27ம் திகதி அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்படவுள்ளது.

ஆஸ்பத்திரியில் புல்வேறு குறைபாடுகள் நிலவிவருகின்றன. 'எக்ஸ்ரே' இயக்திரம் பல காலமாகப் பழுதடைந்து கிடக்கிறது. ஒழுங்காக சேவையிலீடுபடக்கூடியதான சிறந்த அம்புலன்ஸ் வண்டி இல்லை. வைத்திய அதிகாரிகள் பற்றாக்குறையாக உள்ளனர். ஊழியர்கள் போதாமல் இருக்கிறார்கள்.

இவைபோன்ற பல குறைபாடுகள் உள்ளபோதும் அவற்றைச் சுட்டிக்காட்டி நிவாரணம் பெறுவதற்கு ஓர் அமைப்பு இல்லாமையால் ஆஸ்பத்திரி அபிவிருத்திச் சங்கம் என்ற ஓர் அமைப்பை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு இம்மாதம்27ம் திகதி அதன் அங்குரார்ப்பனக் கூட்டம் நடைபெற உள்ளது.

மாவட்ட வைத்திய அதிகாரி திரு. செ. பத்மநாதன் தலைமையில் நடைபெறும் இக் கூட்டத்தில் பல்வேறு பொதுநல மன்றங்களின் பிரதிநிதிகளும் ஆஸ்பத்திரி நலன் விரும்பிகளும் பங்குபற்றுவார்கள்.

( 6ம் பக்கம் பார்க்க)

# பெற்றேல் நிலையக் கொள்ளை வழக்குவிசாரணைஒத்திவைப்பு

(மாவிட்டபுரம்)

புன்னாலைக்கட்டுவன் பெற்றோல் நிலயக் கொள்ளை தொடர்பாக றிமாண்டிலுள்ள சந்தேகநபர் தாம் சுற்றவாளி எனக் கூறியதால் வழக்கு விசாரணைக்காக ஒத்திப்போடப்பட்டது.

புன்னாலைக்கட்டுவன் பெற்றோல் நிலைய மனேஜர் செல்வி சத்தியா வேதநாயகியை துப்பாக்கி முனையில் பயமுறுத்தி அவர்அணிந்திருந்த 7,000ரூபா பெறுமதியான தங்கச்சங்கிலியை அபகரித்ததுடன் பெற்றோல் நிலயத்திலிருந்த 1,400 ரூபா பணத்தையும் கொள்ளையடித்தது தொடர்பாக குப்பிளானைச் சேர்ந்த விசுவலிங்கம் சங்கரலிங்கம் என்பவர் கைதாகிறிமாண்டில் வைக்கப்பட்டதுடன் அடையாள அணிவகுப்பிலும் அவர் அடையாளம் காணப்பட்டிருந்தார்.

மேற்படி சம்பவம் தொடர்பாக இந்நபர் மீது சுன்னாகம் பொலிசார் மல்லாகம் நீதிமன்றத்தில் குற்றப் பத்திரத்தைத் தாக்கல்செய்தனர். அச்சமயம் குற்றவாளியா? சுற்றவாளியா? என்று இவரை கேட்டசமயம் சுற்றவாளி என்று கூறினர்.

இதனையடுத்து வழக்கு விசாரணைக்காக மார்ச் 23ம் திகதி வரை ஒத்திப்போடப்பட்டதுடன் அன்றுவரை இவர் றிமாண்டில் வைக்கப்பட்டார்.

CENTRIC

சென்ட்றிக் விவசாய பம்ப்.



● உலகப் புகழ் றுபின் பெட்ரல்/மண்ணெண்ணெய் அல்லது யன்மார் டீசல் எஞ்சின் பொருத்தியது.
● நிகர் நிற்க முடியாத எரிபொருட் சிக்கனம். தனித்துவமான தன்னியக்க எரி பொருள் மாற்றும் விசை.
● இடம் மாற்றும் வசதி கொண்ட பாரம் குறைந்தது.
● நிலைத்து நிற்பதற்காக வார்ப்பிரும்பிலும் பித்தளையிலும் உருவானது;
● சென்ட்றிக் - 30 வருடங்களுக்கு மேல் 60,000 பேர் நம்பிப் பாவிப்பது.

விலை: ரூ. 4,750/- முதல்.
1½'', 2'', 3'', 4'' ரகங்களில் கிடைக்கும்

ஜினசேன லிமிடெட்.
4, உனுப்பிட்டியா வீதி
கொழும்பு 2.
தொலைபேசி: 26558/9

## சிமெந்து மோசடி வழக்கு-

# "வெளிநாட்டு சிமெந்து பக்கற்றை 2-ம்எதிரி வீட்டில் கைப்பற்றினேன்"

### உதவி இன்ஸ்பெக்டர் சாட்சியம்

(சாவகச்சேரி)

சம்பவதினம் 1ம் சாட்சி இராமசாமி செல்வராசா என்பவரின் முறைப்பாட்டின்படி விசாரணைக்குச் சென்றேன். கைதடி, மறவன்புலோ, பிணமுருங்கு என்னுமிடங்களில் இருந்து களவுபோன சீமெந்து மீட்கப்பட்டது. முதல்முறை 2ம் எதிரியையும், இரண்டாவதுமுறை முதலாம் எதிரியையும் கைதுசெய்தேன்''.

சீமெந்து மோசடி வழக்கில் சாட்சியமளித்த சாவகச்சேரி உதவி பொலிஸ் பொறுப்பதிகாரி சுனின் வீரக்கோன் மேற்கண்டவாறு கூறினார்.

இவ் வழக்கு சாவகச்சேரி நீதிமன்றத்தில் நீதிபதி எம். எச். காரியப்பர் முன்னிலையில் நடைபெற்றது.

இவ்வழக்கில் 80 ஏப்ரல் எட்டாம் திகதி நாவற்குளி தேசிய வீடமைப்புத் திட்டத்திற்குச் சொந்தமான 4659 ரூபா 20 சதம் பெறுமதியான சீமெந்தை மோசடிசெய்ததாக க. ரவீந்திரன், க. சிங்கராசா என்பவர்களுக்கெதிராக சாவகச்சேரிப் பொலிசாரால் குற்றம்சாட்டப்பட்டிருந்தது.

வழக்காளி சார்பில் பொலிஸ் சார்ஜன் வீ. செல்லையாவும், எதிரிசார்பில் சட்டத்தரணி செ. அம்பிகைபாலனும் ஆஜராகினர்.

உதவிப் பொறுப்பதிகா ாசாட்சியமளிக்கையில் கூறியதாவது; இதுசம்பந்தமாக வெளிநாட்டுச்சீமெந்து 9 பாக்கும் வெற்று 4 பாக்கும் 2ம் எதிரியின் வீட்டிலிருந்து கைப்பற்றினேன். பின்னர் அடையாளங்களோடு மன்றிற்குச் சான்றுப் பொருட்களை ஒப்படைத்து எதிரிகளை நீதிமன்றத்தில் ஆஜர்செய்து வழக்கைத் தாக்கல்செய்தேன்.

எதிரிகள் சார்பில், சட்டத்தரணி செ. அம்கைபாலன் குறுக்குவிசாரணை செய்தார்.

சட்: சாட்சி முறைப்பாடு செய்தபொழுது சீமெந்துபாக்கில் ஏதாவதுஅடையாளமிருக்கிறதாவெனக் கேட்டீரா?

(7ம் பக்கம் பார்க்க)

## 'பாடசாலைக்[...]

# 1லட்சம் 30 ஆ[...] 40ஆயிரமே [...]

(சங்கானை)

சிவப்பிரகாச மகாவித்தியாலயத்திற்கு வட்டுக்கோட்டை எம். பி. திரு. தா. திருநாவுக்கரசுவினல் 1980ம் ஆண்டுக்கு ஒதுக்கப்பட்ட 1 லட்சம் 30 ஆயிரம் ரூபாவில் 40.000 ரூபா மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளது. மிகுதி 90,0ɔɒ ரூபாவும் திரும்பிவிட்டது. 81ம் ஆண்டுக்கு ஒதுக்கப்பட்ட 87,416 ரூபா இதுவரை பயன்படுத்தப்படவில்லை. இவ்வருடம் ஒதுக்க[...] ரூபா பற்றியு[...] முடியவில்லை.

சங்கானை பி[...] முன்றலில் ந[...] அபிவிருத்திச்[...] பிரதிநிதிகள் [...] கூட்டத்திற்கு [...] திரு. ச, க. [...] கண்டவாறு கூ[...]

இளைஞர் [...] திரு. சிவதட்[...] சாலை, ஆஸ்ப[...] ஆகிய மூன்று [...] துரிதமாக நி[...] வழிவகைளை [...] வேண்டுமென[...] ருத்திச் சங்க [...] இந்தப் பிரச்[...] சிரத்தை [...] இல்லை என்று[...] தவணைப் பரு[...] முன்னரே ஆ[...] கூட்டத்தை [...] வாகத்திடம் [...] அபிவிருத்திப்[...] டைக்கவேண்[...] வர் மேலும் [...]

மகாவித்தி[...] திச்சங்கச் செ[...] இராமலிங்கம்[...] தித்து மார்ச்2[...] கூட்டம் நட[...] மானிக்கப்பட்[...] வித்தார்.

இக்கூட்டத்[...] துக்கொண்ட [...] பட்டினசபை [...] பினர் திரு[...] சங்கானை ஆ[...] டத்தரிப்பு [...] தான மூலம் [...] யும் ஆகவே [...] மேலும் தாம[...] தப் போக்குவ[...]



## பஸ் சாரதி கொலை வழக்கு:

# இராசையாவும் மகனும் வெட்டியதாக இறந்தவர் என்னிடம் கூறினர்''

### மைத்துனர் சாட்சியம்

(சாவகச்சேரி)

சம்பவதினம் எழுது ம்ட்டுவாளில் உள்ள எனதுவீட்டில் மனைவி பிள்ளைகளோடு இருந்தேன். அன்றிரவு 9மணி வரையில் யோகலிங்கம் அருட்சோதி என்பவர்கள் வந்து உங்கள் மைத்துனர் சிதம்பரநாதனை வெட்டிப்போட்டார்கள் என்றனர். யார் வெட்டினர்கள் என்பதைகூறவில்லை. உடனேநான் சம்பவ இடத்திற்கு ஓடினேன். அப்பொழுது இராசையா வீட்டுப்படலையடியில் என் மைத்துனரை கண்டேன்.

பஸ் சாரதி கொலை வழக்கில் சாட்சியமளித்த சி. ஐயாத்தம்பி மேற்கண்டவாறு கூறினர்.

இவ்வழக்கு சாவகச்சேரி நீதிமன்றத்தில் நீதிபதி எம். எச். காளியப்பர் முன்னிலையில் நடைபெற்றது.

இவ்வழக்கில் பஸ் சாரதி சிதம்பரநாதனை எழுதுமட்டுவாளைச் சேர்ந்த இராசையா, சுந்தரலிங்கம் என்பவர்கள் வெட்டிக் கொலை செய்தார்கள் எனச் சாகவச்சேரிப் பொலிசாரால் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

வழக்காளி சார்பில் பொலிஸ் சார்ஜன்ட் செல்லையா சட்டத்தரணி செ. அம்பிகைபாலன் ஆகியோர்கள் அனுசரணையுடன் சட்டத்தரணி ஆர். ஸ்ரீசிவாயவும் 1ம் எதிரிசார்பில் சட்டத்தரணி எஸ். சுரேந்திரன் அனுசரணையுடன் சட்டத்தரணி எஸ். சிவலோகநாதனும் 2ம் எதிரி சார்பில் சட்டத்தரணி வ. செல்லத்தம்பியும் ஆஜராகினர்.

ஐயாத்தம்பி சாட்சியமளிக்கையில் குறிப்பிட்டதாவது: ''நான் அப்பொழுது மைத்துனரை என்ன நடந்தது என வினவினேன். கந்தர் இராசையாவும் மகனும் வெட்டிப் போட்டார்கள். உடனடியாக என்னை ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோ என்றர். நான் உடனே குலசேகரம்பிள்ளையின் லொறியில் கொண்டு சென்று ஆஸ்பத்திரியில் அனுமதித்துவிட்டு பொலிஸ் நிலையத்துக்குச் சென்று முறைப்பாடு செய்தேன். கூண்டுக்குள் நிற்கும் முதலாவது நபரின் பெயர் இராசையா அவரைச் சின்னத்தம்பி என்றும் அழைப்பர் இரண்டாவது நபரின் பெயர் சுந்தரலிங்கம்''.

மேல் விசாரணை மார்ச் 15ம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டது. (க)

## சிங்கி இறால் பிடித்தவருக்கு அபராதம்

(மாவிட்டபுரம்)

அனுமதிப்பத்திர மின்றி சட்டவிரோதமாக சிங்கிஇறால் பிடித்த நபர் ஒருவருக்கு மல்லாகம் நீதிபதி 50ரூபா அபராதம் விதித்தார்.

இளவாலையைச் சேர்ந்த திருச்செல்வம் பிரான்சிஸ் என்பவர் மாதகல் கடலில் சட்ட விரோதமாக 4 சிங்கி இறால்களைப் பிடித்ததாக கடற்றெழில் பரிசோதகர்கள் திரு. இ. கணநாதன், திரு. பொ. இராமநாதன் ஆகியோரால் கைதுசெய்யப்பட்டு மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டார்.

இந்நபருக்கு 50 ரூபா அபராதம் விதித்த நீதிபதி திரு. சீ. வி. விக்னேஸ்வரன் இனி மேல் இப்படியாக சிங்கி இறால்களைப் பிடிக்கக்கூடாதெனவும் எச்சரித்தார்.

## தற்கொலை

(மாவிட்டபுரம்]

தொய்வு நோய்க்கு முடிவு கட்ட விரும்பிய 65 வயது வயோதிபர் ஒருவர் நஞ்சருந்தி மரணத்தைத் தழுவிக்கொண்டார்.

ஏழாலை வடக்கு ஊரங்குனையைச் சேர்ந்த கனகர் ஆறுப்பிள்ளை என்பவரே இவ்வாறு தற்கொலை செய்துகொண்டவராவார்.

விசாரணைகளை நடத்திய திடீர் மரணவிசாரணைஅதிகாரி திரு. நா. தம்பிராசா தற்கொலை எனதீர்ப்புவழங்கினர்.


# ரீப்போல் பீங்கான்-கழுவிபோட்டியில் வெற்றி பெறும் 25 அதிர்ஷ்டசாலிகள்

**1-ம் பரிசு** ஒரு நவீன சமையலறைக்குரிய இறக்குமதி செய்யப்பட்ட ஷ்றைபர் தளபாடத் தொகுதி
திருமதி ஈ. டி. ரேசலின்,
19, எம். சி. குவார்டர்ஸ் ஸ்ரீ சரணங்கார ரோட்,
தெகிவளை.

**2ம் பரிசு**
பேபி பெலிங் மின்சார குக்கர்
துல்செத் றெட்றிகோ
57/11, மான்ஷன் பிளேஸ், சிலாபம்,
நீர்கொழும்பு.

**3-ம் பரிசு**
மிதவெப்ப மின்சார சமையல் பாத்திரம்
திருமதி எம். ஈ. எம். தோம்ஸன்
38A, சப்பல் வீதி, நுகேகொடை

**4-ம் பரிசு**
அடிப்பிடிக்கா[illegible] 'மேயர்' பாத்திரக் கூட்டம்:
திருமதி ஜானகி பெர்னன்டோ
124/1, பாண்ஸ் பிளேஸ், கொழும்பு7

**5-ம் பரிசு**
ஸ்வான் மார்க் மின்சார கேத்தல்
திருமதி ராணி பீரிஸ்
பி. ஐ. பங்களா, பொத்தோட,
கதிரான, நீர்கொழும்பு.

**10 ஆறுதல் பரிசுகளாக ஒவ்வொரு தேர்மோஸ் பிளாஸ்க்:**
திருமதி வையோமி பெர்னன்டோ, இரத்மலானை.
திருமதி சித்திரா கே. குணதிலக, கொழும்பு—5.
பிரியந்தி டி. சில்வா (ஜி. டபிள்யூ) கொழும்பு—5.
அனோமா சாந்தினி பொன்சேகா, பாணந்துறை.
திருமதி எவ். ஜே. ரத்னயக்க, கொழும்பு—5.
திருமதி எஸ். விமலசூரிய, கல்கிசை.
திருமதி டி. எல், மகாநாம, கம்புறுப்பிட்டி.
திருமதி என். ஜயசிங்க, தெஹிவளை.
திருமதி ஓ. ஏ. ஏக்கநாயக்க, ராஜகிரிய.
திருமதி ஐ. எஸ். எம். அரூஸ், கொழுப்பு 5.

**10 ஆறுதல் பரிசுகளாக நீர்சூடாக்கும் மின்கம்பிச் சுருள்:**
செல்வி சந்திரகாந்தி பெரேரா, நுகேகொடை.
திருமதி ஏ. ஹுசெயின் மொஹமட், கொழும்பு 3.
செல்வி ஜிஹாரா மொஹமட், கொழும்பு 3.
திருமதி எல். ஹன்வெல்ல, தெஹிவளை.
எம். டி. சில்வா, மூதூர், (கி. மா)
ஏ. டபிள்யூ. எம். அவ்வான், கண்டி.
கிரிஜா அகர்வால். கொழும்பு 7
திருமதி ஏ. சி. ரத்னவிபூஷண, தெஹிவளை.
என். பி. யூ. நவரட்ண, தெஹிவளை.
செல்வி நெலுக்கா ஜயதிலக, நாவல.

ரீப்போல் பாவிப்போர் அதிர்ஷ்டசாலிகள்

# லங்கெம் சிலோன் லிமிட்டெட்

LANKEM

760, பேஸ்லைன் ரோட், கொழும்பு 9.



# சென்னை- ரூபவாஹினி தொலைக்காட்சிசேவையை

கண்டுகளிக்க

Nippon-DX நிப்பொன் டி எக்ஸ் ஏரியல்களை குறைந்த செலவில் தயாரித்து அமைப்பதற்கும்

ரி. வி. றேடியோ - மணிக்கூடு பழுதுபார்ப்பதற்கும், பாடல்களை பதிவு செய்வதற்கும்

## வீனஸ் றெக்கோடிங் றேடியோ வாச் வேக்ஸ்

266/1, ஸ்ரான்லி வீதி, ஸ்ரீதர் தியேட்டர் முன் யாழ்ப்பாணம்.

# ...கு ஒதுக்கப்பட்ட ...ஆயிரம் ரூபாவில் ...செலவிடப்பட்டது

...கப்பட்ட 75,000 ...யும் விபரம் அறிய ...).

...பிள்ளையார் ஆலய ...நடத்த சங்கானை ...க்கான சங்கங்க...ர் ஆலோசனைக் ...கு தலைமை வகித்த ... கந்தசாமி மேற் ... கூறினர்.

... சேவை அதிகாரி ...ட்சணமூர்த்தி பாட...பத்திரி, பஸ்சேவை ...று பிரச்னைகளையும் ...நிறைவேற்றுவதற்கு ... முதலில் ஆராய ...ன கூறினர். அபிவி... உறுப்பினர்களும் ...ச்னைகளில் கூடிய ... காட்டுபவர்களாக ...றும் இந்த முதலாந் ...ருவகாலம் முடிய ...ஆண்டுப் பொதுக் ... கூட்டி புதிய நிர் ... மகாவித்தியாலய ...ப் பணிகளை ஒப்ப ... ...வும் தலை ... தெரிவித்தார்.

...தியாலய அபிவிருத் ...செயலாளர் திரு. சு. ...ம் இதனை ஆமோ...ச்23ம்திகதி ஆண்டுக் ...த்துவதற்குத் தீர் ...ட்டுள்ளதாக தெரி...

...த்தில் பங்கெடுத் ... பண்டத்தரிப்புப் ... முன்னாள் உறுப் ...' த. தம்பித்துரை ...ஆஸ்பத்திரி — பண் ... வீதியைச் சிரம ... திருத்தியுள்ளதா ... பஸ் சேவையை ...மதமின்றி நடாத் ...வரத்துச்சபை அதிகாரிகளுடன் தொடர்பு கொள்ளுமாறும் கேட்டுக்கொண்டார்.

சங்கானை அரசினர் ஆஸ்பத்திரியில் வைத்திய அதிகாரிக்கு தங்கி இருப்பதற்கு வீடு வசதி இதுவரை அமைத்துக்கொடுக்காததால் தற்பொழுது ஏற்பட்டிருக்கும் வைத்திய அதிகாரியின் காலி இடத்திற்கு வேறு எவரும் வரச் சம்மதிக்கிறார்கள் இல்லை என்றும் இவ்விடயத்தையும் நடப்பு வருடத் திட்டங்களில் சேர்க்குமாறு வட்டுக்கோட்டை எம்பியைக் கேட்டுக்தீர்மானமும் நிறைவேறியது. (க)

## திருமதி சிறிமா இந்தியா விஜயம்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா தலயாத்திரை மேற்கொள்ள இந்தியா சென்றுள்ளார்.

வட இந்தியாவிலுள்ள பல பௌத்த புனிதத்தலங்களுக்கும் விஜயம் செய்வதுடன் பௌத்த காயாவுக்கும் செல்வார்.

தலைநகரான புதுடில்லிக்கும் குறுகிய விஜயமொன்றைமேற்கொள்வாரென்றும், அங்கு பிரதமர் திருமதி இந்திராகாந்தி மற்றும் பல தலைவர்களைச் சந்திப்பார் என்றும், மார்ச்மாத முதல் வாரப்பகுதியில் இவர் நாடு திரும்புவாரென்றும் சுதந்திரக்கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன. (கி)

## வேலை தேடிச் சென்ற இலங்கைவாலிபர்கள்பம்பாய் வீதிகளில் திரிகிறார்களாம்

பம்பாய், பெப், 24

இந்தியத் துறைமுகங்களிலிருந்து வெளிநாட்டுக் கப்பல்களில் வேலைவாய்ப்புக்களைப் பெறலாம் என்று நம்பிச் சென்ற இருபது இலங்கையர் பெரும் கஷ்டங்களுக்குள்ளாகி பம்பாய் நகர வீதிகளில் பரிதாபத்துக்குரியவர்களாக அலைந்து திரிகின்றனர் என்று சர்வதேச பொலிஸ் சேவையான 'இன்டர் போலின்' இந்தியக் கிளை அறிவித்துள்ளது.

இத்தொகையினரில் இருவர் தம்மைக் காப்பாற்றப் பிச்சை எடுத்துத் திரிகின்றனர் என்றும் அது மேலும் குறிப்பிட்டுள்ளது.

இலங்கையிலிருந்து இந்தியாவுக்குச் சென்று அங்குள்ள துறைமுகங்களூடாக வெளிநாட்டுக் கப்பல்களில் வேலை வாய்ப்புக்களைப் பெறலாம் என்று நம்பிச் செல்வோர், தமது நோக்கம் நிறைவேறாத பட்சத்தில் தமது சொந்தச் செலவினங்களுக்காக கொண்டு வந்த பணத்தையெல்லாம் செலவழித்த பின்னரே மேற்படி பரிதாபமான முறையில் நடமாடுகின்றனராம்.

இவ்விளைஞர்களில் பலர் போதைவஸ்து சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டதாகப் பொலிஸ் பாதுகாப்பிலும்வைக்கப்பட்டுள்ளனராம்.

தகுந்த விபரங்களும், அறிக்கைகளும் கிடைத்த பின்னர் மேற்படி இளைஞர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படுமென இலங்கைப் பொலிஸார் அறிவித்துள்ளனர். (கி)

## உபவாச நாட்கள் பற்றி விளக்கம்

(அரியாலை)

''உபவாச நாட்கள் எம்மை இறைவனிடம் இழுத்துச்சேர வழி வகுக்கிறது. உபவாச நாட்கள், சாம்பல் புதன் கிழமையோடு ஆரம்பமாகி இறைவன் உயிர்த்தெழுந்த திருநாளோடு முற்றுப்பெறுகிறது. இந்தக் காலத்தை நாம் மிகவும், புனிதமாகவும், பயபக்தியுடனும் அனுட்டிக்க வேண்டும்''

இவ்வாறு யாழ்ப்பாண அர்ச்சுக்கன் அருட்திரு. சாம். டி. ஹோர் சிங்டன் அடிகளார் நல்லூர் பரியாக்கோபு ஆலயத்

(7ம் பக்கம் பார்க்க)


SINGER (JAFFNA)

வழங்கும் விசேட சலுகை

நீடித்த பாவனைக்கும், நேர்த்தியான தையலுக்குகந்த சிங்கர் தையல் மெசின்கள், இலகுவான தவணைக்கட்டணத்திலோ அல்லது முழுத்தொகையுமோ செலுத்தி, பெற்றுக் கொள்ளலாம்,

3 தரங்களில் கிடைக்கின்றன

| | | | |
|---|---|---|---|
| [I] | 298 Iw | சிங்கர் ஓட்டோமற்றிக் | ரூ. 4570-00 |
| [II] | 287 Iw | சிங்கர் சிக் - ஷாக் | ரூ. 3670-00 |
| [III] | 15 N | சிங்கர் ரெயிலறிங் | ரூ. 2870-00 |

பல்வேறு தொழிற்பாட்டு தையல்களுக்கான அமைப்பு இணைக்கப்பட்டுள்ளது

வீட்டுப் பாவனைக்கு - சிங்கர்

தொழிற்சாலைகளுக்கு - சிங்கர்

தையல் தொழிலாளர்க்கு - சிங்கர்

உலகம் முழுவதுக்குமே சிங்கர் உற்ற நண்பன்

கையிருப்பு மிகக் குறைவு

மேலதிக விபரங்களுக்கு:

சிங்கர் கொம்பனி

ஆஸ்பத்திரி வீதி. (பஸ்நிலையம் முன்பாக)

யாழ்ப்பாணம்.

(தொலைபேசி: 7141)



# அக்கினிக் குஞ்சினுல்... அழிந்தது காடு!



பாரதி நூற்றுண்டு இது. அவர் பாடல் ஞாபகமா? ''அக்கினிக் குஞ்சொன்று கண்டேன்: அதை அங்கொரு காட்டிலோர் பொந்திடை வைத்தேன்; வெந்து தணிந்தது காடு; தழல் வீரத்தில் குஞ்சென்றும் மூப்பென்றும் உண்டோ?. ஒரு சிறு தீப் பொறியால் பெரும் தீ விபத்து ஏற்படலாம். உங்கள் வீடு, அலுவலகம், கடை, தொழிற்சாலை எல்லாம் வெந்து நீறுகி, உங்கள் பொருட் செல்வம் அனைத்தும் பொசுங்கி விடலாம்.

இதைத் தடுக்க நிச்சயமான பாதுகாப்பான வழி என்ன? தேசிய காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தில் தீ விபத்துக் காப்புறுதி செய்து கொள்ளுங்கள். உடனடியாக நஷ்ட மதிப்பீடு செய்து நஷ்ட ஈட்டை வழங்கும் உத்தரவாதத்தைத் தேசிய காப்புறுதிக் கூட்டுத்தாபனம் அளிக்கிறது.

காப்புறுதித் துறையில் புதிய அனுபவம் — தேசிய கூட்டுத்தாபனம்

தேசிய காப்புறுதிக் கூட்டுத்தாபனம்

660, காலி வீதி, கொழும்பு 3

தொலைபேசி: 81344

Almeida Associates

வெலிங்டன் (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
ஜெய்சங்கர் — ஜெய்சித்ரா
கல்யாணமாம் கல்யாணம்

லிடோ (யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள்
பூந்தளிர்

ஸ்ரீதர் தினசரி 10.30, 2.30, 6.00, 9.30
யாழ். நகர் சிவாஜி — ஜெயலலிதா
பட்டிக்காடா பட்டணமா
(புதிய பிரதி)

ராணி (யாழ். நகர்) தினசரி 10.30, 2.30, 6.15 9.30
கமலஹாசன் - ரதி நடித்த
உல்லாசப் பறவைகள்
(ஈஸ்ட்மன் கலர்)

சாந்தி (யாழ். நகர்) 10—30, 2—30, 4—45 7—00: 9—30
JIM BROWN, JIM KELLY Three The Hard Way
27—2—82 "HORROR EXPRESS" [—Terror Film—
(Strictly adults only)

மனோகரா (யாழ்ப்பாணம்) 10—30, 2—30, 6—30, 9—30
ஞானக்குழந்தை

வின்ஸர் (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
நடிகர் திலகம் சிவாஜி-புன்னகை அரசி கே. ஆர். விஜயா, ஸ்டைல் நடிகன் ரஜனிகாந்த்-சுமித்ரா-தேங்காய்
ஜஸ்டிஸ் கோபிநாத்

யாழ். றீகல் தினசரி 10—30, 2—30, 6—30, 9—30 நான்குகாட்சிகள்
பெண்களின் ஏகோபித்த பாராட்டுகளுடன் காட்சியளிக்கிறது.
விஜயன் சுருளிராஜன் சத்தியகலா
தனிமரம்
டைரக்ஷன் துரை கலர்
இசை: சங்சர்— கணேஷ்

ராஜா (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
மலையாளப் பட வரலாற்றில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி வசூலிலும் பெரும் சாதனையை ஏற்படுத்தி இலங்கையில் செம்மீன் வெற்றிப் படத்தை யடுத்து வெளிவரும் வெள்ளி விழா சித்திரம்.
இந்திய ஜனாதிபதியின் சிறந்த பரிசுக்கான தங்கப் பதக்கத்தைப் பெற்றது.

பிரதாப் சுரேகா தக்காரா
(கலர்—மலையாளம்)
(கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு மட்டும்)

## நடப்பு வருட நிர்வாகிகள்

(புலோலி)

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகத்தின் தலைவராக மீண்டும் திரு. எஸ். ஆனந்தன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இவ்விளையாட்டுக்கழகத்தின் வருடாந்த பொதுச் கூட்டம் பருத்தித்துறை திக்கழுனைமை தானத்தில் கழகத்தலைவர் திரு எஸ். ஆனந்தன் தலைமையில் நடைபெற்றது.

உபதலைவராக கோ. இரத்தின சோபாலும், செயலாளராக சு. இளங்கோவும், உப செயலாளராச என். ரவீந்திரனும், பொருளாளராக இ. முரளிமனேகரனும் உப பொருளாளராக எஸ். விஜயராசாவும், செயற்குழு உறுப்பினர்களாக ந. சிவசுப்பிரமணியம்' சி. பாலசுப்பிரமணியம், க. ஜெயக்குமார். கணக்குப்பரிசோதகர்களாக மு. தர்மகுலசிங்கம், அ. அச்சுதகுமார் தெரிவுசெய்யப்பட்டனர்.

ஃ ஃ

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு அரசினர் கிராமிய வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கம் அங்குரார்ப்பணப் பொதுக்கூட்டம் வைத்திய பொறுப்பதிகாரி டாக்டர் ஜி. பத்மஜயென் தலைமையில் வைத்தியசாலை வெளி நோயாளர் பிரிவில் நடைபெற்றபோது தெரிவு செய்யப்பட்ட நிர்வாகிகள்: தலைவர் சி. நடராசா. உபதலைவர் மு. நடராசா. செயலாளர் ச. செல்வரத்தினம். உபசெயலாளர் என். எம். கந்தசாமி. பொருளாளர் வி. நவரத்தினராசா. கணக்கு பரிசோதகர் இ. நாகராசா, செயற்குழு உறுப்பினர்களாக ஒன்பது பேர் தெரிவு செய்யப்பட்டனர்.

ஃ ஃ

(மண்டைதீவு)

ஊர்காவல்துறை மீனவர்கள் கூட்டுறவுச் சங்கத்தின் மண்டைதீவுக் கிளையின் பொது கூட்டம் தலைவர் திரு. செ. செவஸ்தீனபிள்ளை தலைமையில் றோ. க. வித்தியாலயத்தில் நடைமெற்ற பொழுது நடப்பு வருட உத்தியோகத்தர்களாக தலைவர் யோ. மரியதாஸ் உபதலைவர் அ. சுவாம்பிள்ளை செயலாளர் வ. சூ. யேசுரட்ணம் 'ஆகியோரும் 4 பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது (வெ)

●

(மண்டைதீவு)

முல்லைத்தீவு தேர்தல்தொகுதியிலுள்ள பனங்காமம் பற்று பல நோக்குக் கூட்டுறவுச்சங்கத்தின் இயக்குநர் சபைத் தேர்தல் கூட்டுறவுப் பரிசோதகர் திரு. எஸ். கணபதிப்பிள்ளை தலைமையில் நடைபெற்றபோது பின்வருவோர் இயக்குநர் சபை உறுப்பினர்களாக திருவாளர்கள் நா. சுந்தரலிங்கம், வே. இராசையா, க. மகாலிங்கம், சி. கனகசபை, சூரியர் தம்பையா க. கிருஷ்ணபிள்ளை, ஆ. சதாசிவம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

● ● ●

[யாழ்ப்பாணம்]

சென் றேக் சன சமூக நிலைய நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: அ. விக்ரர். உப தலைவர்: வ. ஞானப்பிரகாசம், இணைச்செயலாளர்கள்: சி. பேளுட், த. சில்வஸ்ரர், பொருளாளர்: வ. ம. ஜெருட்

ஹரன் யாழ். நகர்
தினசரி 4 காட்சிகள்
Macheal Caine-Omasharif
Ashanti
Adults—Action—Color

வெஸ்லி அளிப்பாய்
தினசரி: 2.30 6.15 9.15
1—3—82 வரை
ஆதிபராசக்தி

அபிவிருத்திசபை கொடிகள்

# சபையின்செலவில்கொடிகள் தயாரித்து வழங்க யோசனை

[வவனியா]

வவனியா மாவட்டக் கொடிகள் இங்குள்ள 25 கனிஷ்ட பாடசாலைகளுக்கும், 10 மகா வித்தியாலயங்களுக்கும், பல்வேறு இலாகாக்களுக்கும் மாவட்ட அபிவிருத்திச்சபையின் நிதியிலிருந்து தயாரித்து வழங்கப்படவேண்டுமென வவனியா எம். பி. திரு. தா. சிவசிதம்பரம் மாவட்ட அபிவிருத்திச்சபைக் கூட்டத்தில் தனது பிரேரணையாக கொண்டு வந்தார்.

சபை மண்டபத்தில் தலைவர் எம். சிற்றம்பலம் தலைமையின் கீழ் நடைபெற்ற மேற்படி கூட்டத்தில் எம். பி.யின் மற்றுமொரு பிரேரணையில், இங்குள்ள அரசாங்க விடுதிகள் யாவும் மிகவும் கேவலமாகவும் கட்டிடங்கள் சீர்கெட்ட நிலையிலும் உள்ளன. இதனுல் சுகாதார பாதிப்புடன் திருடர் நடமாட்டத்துக்கும் ஏதுவாக உள்ளது. சில விடுதிகளுக்குப் பக்கத்தில் பற்றைகளும் காணப்படுகின்றன. இவை யாவும் உரிய அதிகாரிகளுடன் தொடர்புகொண்டு ஆவன செய்யப்படவேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்.

# இன்றைய பலன்

மாசி மாதம் 13ம் திகதி
வியாழக்கிழமை
(25—2—82)

மேடம்: மேடைப் பேச்சாளர் பெரும் புகழ் அடைவர், நாடகக் கலைஞர்களுக்கு நன்மையான தினம், இனபந்துக்களின் கொண்டாட்டங்களுக்கும் இடமுண்டு, சிறப்பான தினம்.

இடபம்: ஆத்திரப்படுவதன் மூலம் அருமையான சந்தர்ப்பத்தை இழக்க நேரிடும், மேலிடத்து செல்வாக்கும் பாதிக்கப்படக்கூடும், அயலார்களுடன் அன்பாக நடந்துகொள்ளவும்.

மிதுனம்: புதிய நம்பிக்கையுடன் வாழ்க்கை ஆரம்பிப்பீர்கள், தெய்வத்தின் அருள் கிடைக்கும், தங்கள் செயற்திறமை மற்றவர்களை திகைக்க வைக்கும், தொழிலும் வெற்றி உண்டு.

கடகம்: உள்ளம் இன்பத்தால் துள்ளும், புதிய நண்பர்களின் சேர்க்கை கிடைக்கும், நீண்டநாள் பிணி நிவர்த்தியாவதற்கும் இடமுண்டு, பிள்ளை ஒன்றின் கல்வி முன்னேற்றம் மகிழ்ச்சியைத்தரும்.

சிங்கம்: கூர்மையான ஆயுதங்களுடன் பழகாதிருக்கவும், போக்குவரத்து விடயத்தில் அதிக கவனம் செலுத்தவேண்டும், திடீர் திருப்பம் உங்களை திகைக்கவைக்கலாம், பேச்சைக் குறைக்கவும்.

கன்னி: காதல் விவகாரங்கள் தலைதூக்கும், இனிமையான சம்பவங்கள் இடம் பெறும், களஸ்திரவழியால் பொருள் வரவுக்கு இடம் ஏற்படும், பெரியோர்கள் ஆதரவு கிடைக்கும், கண்ணியமான தினம்.

துலாம்: வேண்டிய ஒருவரை பகைத்துக்கொள்ள நேரிடலாம், அவசரப்போக்கினுல் ஆபத்துக்கள் விளையும், சிலர் வாழ்க்கையில் பிரிவுத்துயர் வாட்டக்கூடும், சகோதரவழியாலும் சஞ்சலம் உண்டு.

விருச்சிகம்: புகழ்தரும் காரியங்களில் ஈடுபடுவீர்கள், அரசியல்வாதிகளுக்கு நல்ல ஆதாயம் கிடைக்கும், எடுத்த கருமத்தை முடிப்பதில் வெற்றியடைவீர்கள், பெரியோர் ஆசியும் அவசியம் கிடைக்கும்.

தனு: தொழில்துறையில் புதிய வெற்றிகள் கிடைக்கும், மேலதிகாரிகளின் பாராட்டுதல்களுக்கு இலக்காகுவீர்கள், சிலர் வாழ்க்கையில் கடல் கடந்த பிரயாணமொன்று மேற்கொள்ளப்படலாம்.

மகரம்: வணிகத்துறையில் முன்னேற்றம் காணப்படும், நீண்டநாள் கொடுக்கல் வாங்கல் நிவர்த்தியாகும், மக்களின் பிரபல்யம் உங்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தும்.

கும்பம்: அதிக சிந்தனை சிறிய தலையிடியைக் கொடுக்கும், உடல் நலம் பாதிக்கப்படலாம், விளைபொருளினுல் பணம் விரயமாகலாம், அதிக கட்டுப்பாடு அவசியம் தேவை.

மீனம்: அவசர புத்தியினுல் விபரீதங்கள் விளையலாம், கோபத்தை அடக்கில் நிலைமை சீர் பெறலாம்.

சோதிடக் கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

## தவக்கால நற்சிந்தனை



நீ தனித்திருந்து உன்னைத்தானே கவனிக்கத்தக்க சமயத்தைத்தோடுசர்வேசுரனுடைய தன்மைகளை அடிக்கடி நினை வீண் விநோத விசாரணைகளையெல்லாம் விட்டுவிடு. உன்மனதை அனுதாபப்படுத்தி இளகச்செய்யும் விடயங்களை வாசி. திட்டமின்றிப் பேசுவதையுப். அவசரமின்றி இங்குமங்கும் திரிவதையும், நூதனமானதும் வீணனதுமான பிரஸ்தாபங்களைக் கேட்பதையும் விட்டு நீ விலகினுல், பக்திக்குரிய தியானங்களில் கவனஞ் செலுத்துவதற்குப் போதுமானதும், தகுந்ததுமான அவகாசம் உனக்குக் கிடைக்கும். அர்ச்சியசிஷ்டர்கள் மனிதருடைய சகவாசத்தைக்கூடுமான போதேல்லாம் விலக்கி சர்வேசுரனைச் சேவிக்கும்படி ஏகாந்தத்தில் சீவிப்பதைத் தெரிந்து கொண்டார்கள்.

[கிறிஸ்துநாதர் அநுசார]

உப பொருளாளர் மு. ஜெயராஜா, கலைக்குழுப் பொறுப்பாளர்கள். வி. மரியதாஸ், வி. ம. ராசேந்திரம், விளையாட்டுப் பொறுப்பாளர்கள்: எஸ். அந்தோனிப்பிள்ளை, ஞா. அனிக்கிலஸ், கணக்குப் பரிசோதசர்: ம. மரியாம்பிள்ளை'

இவர்களுடன் 11 பேப் கொண்ட நிர்வாகக்குழு உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டார்கள். [இ]

## தெல்லிப்பழையில்

(3ம் பக்கத்தொடர்ச்சி)

ஆஸ்பத்திரி வைத்திய அதிகாரி செல்வி எஸ். பொன்னுத்துரை மாவட்டவைத்திய அதிகாரியுடன்இணைந்துஇதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளார்.

## வெளிநாட்டு

(4ம் பக்கத் தொடர்ச்சி)

நான் கேட்டபோது அடையாளமிருக்கவில்லை எனக்கூறினுர்.

சட்; இந்தச் சீமெந்து எத்தகையது?— வெளிநாட்டுச் சீமெந்து எனக் கூறப்பட்டது.

மார்ச் மாதம் 8ம் திகதி வரை வழக்கு ஒத்திவைக்கப் பட்டது. (க)

# ஜெயதிலகா மீதான வழக்கு மார்ச் 23-க்கு ஒத்திவைப்பு

[மாவிட்டபுரம்]

ப.நோ.கூ. சங்க ஊழியரை தாக்கியது, அவரிடமிருந்த துணி வகைகளைத் திருடியது ஆகிய குற்றச்சாட்டுகளின் மீது முன்னாள் சுன்னாகம் பொலிஸ் உதவி இன்ஸ்பெக்டர் திரு. ஜெயதிலகா மீது தொடரப்பட்டுள்ள வழக்கு மீண்டும் மார்ச் 23ம் திகதிக்கு ஒத்திப் போடப்பட்டது.

தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச்சங்க கிளை இரண்டின் மனேஜராக இருந்த கணபதிப்பிள்ளை சிவநேசன் என்பவரிடமிருந்து 1500 ரூபா பெறுமதியான புடவை, துணிவகைகளை திருடியதாகவும், அவரைத் தடுத்து வைத்து பலாத்காரம் புரிந்ததாகவும் குற்றஞ்சாட்டி மேற்படி உதவி இன்ஸ்பெக்டர் மீது தொடரப்பட்டிருந்த வழக்கில் அழைப்பாணை கிடைத்தும் எதிரி நீதிமன்றத்தில் சமூகமளிக்காமையால் பிடிவிருந்து பிறப்பிக்கப்பட்டிருந்தது.

மேற்படி உதவி இன்ஸ்பெக்டர் மீதான வன்செயல் சம்பவங்கள் குறித்து வழக்குத் தவணையன்று இவ்வழக்கையும் ஒத்திவைக்குமாறு கோரப்பட்டதால் கடந்த 23ம் திகதிவரை இவ்வழக்கை நீதிபதி திரு. சீ. வி. விக்னேஸ்வரன் ஒத்திவைத்தார்.

நேற்று முன்தினம் மீண்டும் இவ்வழக்கு எடுக்கப்பட்டபோது வன்செயல் சம்பவங்கள் தொடர்பான வழக்கு அடுத்தமாதம் 23ம் திகதியே நீதிமன்றத்தில் எடுக்கப்பட இருப்பதாகதெரிவிக்கப்படவே அத்திகதிக்கு இவ்வழக்கையும் நீதிபதி மீண்டும் ஒத்திவைத்தார். வழக்காளி சார்பில் சட்டத்தரணி ஆர். ஜே. செல்வரத்தினம் ஆஜராகி இருந்தார்.

---

## வரி விளம்பரம்

### தேவை

கைத்தறி நெசவாளர்கள் தேவை.(இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம்) Furnishing Fabrichஇல் சிறந்த அனுபவமுள்ளவர்கள் விரும்பத்தக்கது. கைத்தறி நெசவு அனுபவமுள்ளவர்களும் விண்ணப்பிக்கலாம். சான்றிதழ்களுடன் 9.3.82க்கு முன்னர் விண்ணப்பிக்க. விளம்பர இல: 2342, மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். 2342

ஸ்ருடியோ ஒன்றிற்கு சகல துறையிலும் அனுபவம் உள்ள நற்குணம் உடைய வேலையாள் தேவை. விண்ணப்பிக்கவும்: விளம்பர இல 2348, மே/பா 'ஈழநாடு', யாழ்ப்பாணம். 2348

சிறந்த கடைச்சல் தொழிலாளர்(LATHEMAN)யாழ்நகரில் பிரபல கடைச்சல் தொழிற்சாலைக்கு உடன்தேவை. விண்ணப்பிக்கவும். வின்சிலோ அன் கோ, 291 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 2385

### பயிற்சி

ஒரு மாத எலக்றிக்கல் வயரிங் பயிற்சி 01.03.82 ஆரம்பமாகின்றது. இன்ஸ்ரிரியூட் ஒவ் என்ஜினியரிங் ரெக்னொலொஜி, 9, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 2332

### விற்பனைக்கு

யாழ்ப்பாணம் இராசாவின் தோட்ட வீதியில் ஏழு பரப்புக் காணியும் வீடும் உடனடியாக விற்பனைக்குண்டு. இரண்டு பரப்பு நிலமுமுண்டு. நேரில் தொடர்பு கொள்ளவும். திருமதி துரைசிங்கம் ''காராளர்வளவு'' பலாலி வீதி. வசாவிளான். 2380

பாவிக்கப்படாத புதிய நெல் உடைக்கும் (சைனா) இயந்திரம் விற்பனைக்குண்டு. க. கெங்காதரன், சித்திராங்கர் வீடு, நெல்லியடி கரவெட்டி. 2373

பிறிபெக்ட் 100 E மொடல் EN கடைசி இலக்க கார் விற்பனைக்குண்டு. திருத்தி அமைக்கப்பட்ட என்ஜின் நல்ல நிலையிலுண்டு. விபரங்களுக்கு க. பஞ்சலிங்கம் வேம்படி (கிழக்கு தெரு) வல்வெட்டித்துறை. 2375

---

### உபவாச

(5ம் பக்கத் தொடர்ச்சி)

தில் நடைபெற்ற விசேட ஆராதனையின்போது பேசுகையில் குறிப்பிட்டார்

---

சுன்னாகம்
பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வரையுள்ளது)
சுன்னாகம்

## முக்கிய அறிவித்தல்

சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் பயன்படுத்தப்படாதிருக்கும் கைத்தறிகள் பத்து(10) கேள்விப் பத்திர மூலம் தனியாகவும், மொத்தமாகவும் விற்பனைக்கு இருக்கின்றன. கொள்வனவு செய்ய விரும்புவோர் ரூபா 100/— செலுத்தி கேள்விப் பத்திரங்களை தலைமை அலுவலகத்தில் 3.3.82க்கு முன்பு பெற்றுக் கொள்ளவும்,

**பொதுமுகாமையாளர்**
22.02.82

2372

---

## நீர்ப்பாசனத் திணைக்களம்
### கிளிநொச்சிப் பிராந்தியம்

கிளிநொச்சிப் பிராந்திய பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் பணிமனையில் கேள்விப்பத்திரசபையின் தலைவரினால் கீழ்க்காணும் வேலைக்கு கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன. கேள்விப் பத்திரம் அனுப்புவதற்கு நீர்ப்பாசனத் திணைக்களத்தில் ரூபா 350,000/—க்கு அல்லது அதற்குக் கூடிய தொகைக்கு பதிவு செய்யப்பட்ட அல்லது வேறு அரச திணைக்களங்களில் ரூபா 1,000,000/—க்கு அல்லது அதற்குமேற்பட்ட தொகைக்குப் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்கள் மட்டுமே தகுதி உடையோராவர்.

### வேலை விபரம்

''பாரமான மண் ஏற்றி இழுக்கும் இயந்திரத்தினால் கிளிநொச்சிப் பிரிவிலுள்ள புதுமுறிப்புகுளம் குளமுறிவுக்குமண்போட்டு நிரப்புதல்.''

கேள்விப் பத்திரங்கள் 08.03.1982 தொடக்கம் 19.03.1982 வரை வழங்கப்படும். கேள்விப்பத்திரவைப்புப் பணமாக ரூபா 250/— செலுத்தவேண்டும். கேள்விப் பத்திரங்கள் 1982ம் ஆண்டு பங்குனி மாதம் 23ந் திகதி காலை 10.00 மணிக்கு முன்பாக சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

**க. குமாரசுவாமி**
நீர்ப்பாசனப் பொறியியலாளர்
கிளிநொச்சி.

2371

---

இலங்கை எண்ணை கொழுப்பு கூட்டுத்தாபனத்தின்
மற்றும் சிறந்த தயாரிப்புக்களான

**ருவன் [Ruwan]**

சுத்திகரிக்கப்பட்ட தேங்காய் எண்ணை விலை ரூ. 16.00
சுத்திகரிக்கப்பட்ட நல்எண்ணை விலை. ரூ. 26.00
சுத்திகரிக்கப்பட்ட சோயா அவரை எண்ணை விலை ரூ. 26.00

விற்பனைக்குண்டு

12 போத்தலுக்கு மேல் கொள்வனவு செய்பவர்கட்கு 1/50 சதம் விசேட கழிவு உண்டு.

தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:

**சிக் அன் கையின்**
8/10, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

2379

---

# ''சமுதாய உணர்வோடு சமயத்தைநோக்க வேண்டும்''

[குறிகாட்டுவான்]

''அகிலத்தின் அண்ட கோளங்களையும் ஆட்டிவைக்கும் சக்திமிக்க இறைசக்தி எங்கும் வியாபித்திருக்கின்றது'' என்பதை உலகுக்குணர்த்திய பெருமைக்குரிய மதம் சைவ சமயமாகும். வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் இருந்தே கலைகளும் பசித்தவனுக்கு அன்னமிடும் அன்னதானமும் ஆலயங்களோடு இணைந்து செயற்பட்டு வந்தன. ஏழைகளின் சிரிப்பில் இறைவனைக் காணுகின்ற மனோபக்குவம் தான் உண்மையான சமயவாதிக்குரிய வரைவிலக்கணமாகும். ஆயிரக்கணக்கான ரூபாயை அனாதைகளுக்காகச் செலவுசெய்து அறப்பணிகளை சமய உணர்வுமிக்கவர்கள் ஆண்டாண்டு காலமாகச் செய்து வருகின்றார்கள் அறப்பணிகள் அனைத்தும் ஆடம்பர உணர்வில்லாத வகையில் செய்யப்பட வேண்டும். அப்போது தான் அவை உண்மையான பலனை ஏற்படுத்தும்.''

புங்குடுதீவு அரியநாயகன் சித்திவிநாயகர் ஆலய முன்றலில் புங்குடுதீவு இருபிட்டி ஐங்கரன் சனசமூக நிலையத்தினர் நடத்திய சமயப் பெருவிழாவில் கலந்து கொண்டு பேசுகையில் சட்டத்தரணி திரு. எஸ். கே. மகேந்திரன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

திரு. மு. நடேசு ஆசிரியர் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் திரு. மகேந்திரன் மேலும் பேசியதாவது:

'சைவ சமயம் என்றும் கலைக்கு முக்கியத்துவம் அளித்திருக்கின்றது என்பதை நடராசப்பெருமானை ஆடும் கூத்தனாக நின்று நாட்டியப் பொக்கிஷமாக மிளிர்வதன் மூலம் அறியக்கூடியதாகவிருக்கின்றது. நடராசரின் ஆடற் தத்துவத்தை ஆராய்ச்சி செய்து அரியபல கட்டுரைகள் வரைந்து, கலாயோகி ஆனந்த குமாரசாமி அரும்புகழ் பெற்றார். இந் நிகழ்வு ஆடற்கலையின் ஆழத்தைப் புலப்படுத்துகின்றது. சமயத்தை வெறும் மத உணர்வோடு நோக்காது சமுதாய உணர்வோடு நோக்க வேண்டும். அநியாயத்தையும் அடக்குமுறைகளையும் சகிக்காது நியாயத்துக்காகக் குரல் கொடுக்கவேண்டும் என்பதை நாயன்மாரின் சரித்திரங்கள் காட்டி நிற்கின்றன'' என்றார்.

நிலையச் செயலாளர் திரு. து. கணேசலிங்கம் நன்றியுரை நிகழ்த்தினார்.

---

## 63-வது வருடாந்த தேசிய திருநாள்

[அரியாலை]

63வது வருடாந்த சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா எதிர்வரும் ஏப்ரல் மாதம் அரியாலையில் சிறப்பாகக் கொண்டாட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதற்கென அமைக்கப்பட்ட சபையின் தலைவராக சிறைச்சாலை அத்தியட்சகர் திரு. ச. சத்தியமூர்த்தியும், பொதுச் செயலாளராக திரு. மு. அ. ஸ்ரீராசலிங்கமும், பொருளாளராக திரு. த. சர்வேந்திராவும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவ்விழாவையொட்டி வடமாகாண ரீதியில் 7பேர்களைக் கொண்ட உதைபந்தாட்டப் போட்டியும், 20 ஓவர்களைக் கொண்ட கிரிக்கட் போஷ்டியும், ஆறுபேர்களைக் கொண்ட கரப்பந்தாட்டம் 'ஓவர் கேம்' போட்டியும், பெண்களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டியும், வேறுபல போட்டிகளும் நடைபெறும்.

---

## யங் ஸ்ரார் வெற்றி

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறை யங்ரோயல் விளையாட்டுக்கழகமும் காங்கேசன்துறை யங் ஸ்ரார் விளையாட்டுக்கழகமும் மோதிய உதைபந்தாட்டபோட்டி ஒன்றில் யங் ஸ்ரார் விளையாட்டுக்கழகம் 1—0 கோலால் வெற்றிபெற்றது.

வலிவடக்கு உதவிஅரசாங்க அதிபர் பிரிவு விளையாட்டு விழாவின் ஓர் அங்கமாக காங்கேசன்துறைப் பட்டினசபை மைதானத்தில் இப்போட்டி நடைபெற்றது. திரு. முருகையா இதறகு நடுவராக இருந்தார்.

---

## தமிழ் தலைவர்....

(2ம் பக்கத் தொடர்ச்சி)

மான்கள். இளைப்பாறிய கல்லூரி அதிபர்கள் உட்படக் கல்வியில் ஆர்வமுள்ள பிரமுகர்கள் அனைவரும் சேர்ந்து தமிழ் மாணவர் கல்வி அபிவிருத்திச்சபை ஒன்றை உடனடியாக நிறுவமுன்வர வேண்டும்.

---

## சமூக

(2ம் பக்கத் தொடர்ச்சி)

பல உள்ளங்களுக்கு உவகையூட்டும், தன்னம்பிக்கையூட்டும் செயல்.

தியாக உணர்வு கொண்டோருக்கு நல்வாழ்வைக்காட்டும் திட்டம்.

சமுதாயத்தில் சிறு சிறு மாற்றங்கள் தான் பெரிய மாற்றங்களுக்குப் படிக்கட்டுகள் என்பதில் நாம் நம்பிக்கையுள்ளவர்கள்

—அறவழிப்போராட்டக்கு

---

யாழ் - மட்டு
சுற்றுப்போட்டி

## இன்னமும் முடிவில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மட்டக்களப்பு உதைபந்தாட்டக் கோஷ்டிகளுக்கு இடையிலான தமது இரண்டாவது சுற்றுப் போட்டி எங்கு நடைபெறும் என இன்னமும் முடிவு செய்யப்படவில்லையென்று இதற்குப்பொறுப்பான அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

விளையாட்டமைச்சின் ஆதரவில் மாவட்டங்களுக்கிடையே நடைபெற்றுவரும் மேற்படி உதைபந்தாட்டத்தின் யாழ்ப்பாணம்—மட்டக்களப்புக் கோஷ்டிகளுக்கிடையிலான இரண்டாவது சுற்றுவட்டப் போட்டி திருகோணமலையில் நடைபெறலாம் என முன்பு கருதப்பட்டது. ஆனால் இப் போட்டிபற்றிய முடிவுஎதுவும் இன்னமும் எடுக்கப்படவில்லையென்று சம்பந்தப்பட்ட அதிகாரிகூறினார்.

---

## இலங்கைத்--

(2ம் பக்கத் தொடர்ச்சி)

னர்கள் இருக்கலாம். இரண்டு பெரும் இயக்கத்தினர் படித்தவர்கள். இவர்களிடம் பலஆயுதங்கள் உள்ளன.

''பாதுகாப்புப் படையினருடன் நடந்த பேராட்டத்தில் ஒரு இளைஞர் கொல்லப்பட்டார். ஒருவர் காயமடைந்தார். 38 பேர் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

''புலிப்படைக்கும் தமக்கும் தொடர்பு இல்லை என்று தமிழர் விடுதலைக் கூட்டணியினர் கூறுகின்றார்கள். வவனியாவைச் சேர்ந்த கத்தோலிக்க துறவி ஒருவரும் பாதுகாப்புப் படையினரின் நடத்தைபற்றி கண்டனம் தெரிவித்து உள்ளார்.

''இலங்கை சுதந்திரம் அடைந்த பெப்ரவரி 4ம் திகதியை தமிழர்கள் கரிநாளக அனுசரித்தனர். ஈழம் என்ற நாடு ஒருநாள் அமைந்தே தீரும். அதனை சிங்களமக்கள் ஏற்றுக் கொள்வார்களேயானால் இரத்தம் சிந்தாமலேயே அது அமையும். யாழ்ப்பாணத்திலிருந்து வரும் சுதந்திரன் பத்திரிகை ஆசிரியர் கோவை மகேசன் கூறுகிறார்.

அடுத்தடுத்து ஆட்சிக்குவந்த அரசுகள் தமிழர்களைப் புறக்கணிக்கிறது. வேலைவாய்ப்பில் பின்தள்ளப்படுகிறார்கள். என்று கூறுகிறார் எதிர்க்கட்சித் தலைவர் அமிர்தலிங்கம்.

''தனிநாடு ஒன்று உருவாவதைத் தவிர எமது சுயமரியாதையைக் காப்பாற்ற எமக்கு வேறு வழியில்லை என்று திரு. அமிர்தலிங்கம் கூறுகிறார்.

''எல்லா அதிகாரங்களும் கொழும்பில் இருப்பதைவிட அதிகாரங்கள் பரவலாக்கப் படவேண்டும் என்ற கோரிக்கைக்கு ஏற்ப மாவட்ட அதிகாரசபைகள் அரசினால் அமுலுக்கு வந்தபோதிலும்— அதிகாரத்தை அமுல்நடாத்த கையில் பணம் இல்லை என்று தெரிவிக்கிறார்—யாழ்மாவட்ட அபிவிருத்திச்சபைத் தலைவர் திரு. எஸ். நடராசா.

''இப்படியே தமிழர்களின் குறைபாடுகளையும் அதற்கு அரசில் இருந்துவரும் பதிலையும் அடுக்கிக்கொண்டே போகலாம்.

இறவா தலைவர்களுக்கு நானளியைத் தந்தருளும் நம்பிக்கைகொள்வோம்''

# 11 இராணுவ வீரர்களும் பிணையில்....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

முதலாவது உட்காயம் இறந்தவரது உடலில் நிலத்திலிருந்து 2 அடி 10 அங்குலத்தில் இருந்தது. இரண்டாவது உட்காயம் நிலத்திலிருந்து 3 அடி 9 அங்குலத்திலிருந்தது.

முதலாவது வெளிக்காயம் (மார்பின் இடதுபக்க மேற்புறம்) ஐந்து எலும்புகளைச் சன்னம் துளைத்துச் சென்றிருந்ததைக் காட்டியது. உட்காயங்களின் பாதிப்பைப் பார்க்கும்போது 2 அடியில் இருந்து 30 அடி தூரத்தில் இருந்து சுட்டிருக்கலாமெனக் கூறலாம்.

## விரைவாக ஓடமுடியாதவர்

''காலமானவரின் இடதுபக்கக் கால் அரை அங்குலம் முதல் ஒரு அங்குலம் வரை மற்றையதிலிருந்து கட்டையாக இருந்தது. அவர் ஓடக் கூடிய நிலையிலிருந்தாலும் மற்றையவர்கள் போல் விரைவாக ஓடமுடியாது. துவக்குச் சூட்டினால் இருதயம், சுவாசப்பை வெகுவாகப் பாதிக்கப்பட்டிருந்தன. இதன் காரணமாக ஏற்பட்டிருந்த அதிர்ச்சி, இரத்தப்பெருக்கு என்பன மரணத்திற்குக் காரணமாகும்.

''2 அடி தூரத்தில் நின்று சுட்டிருந்தால் காலமானவரின் மேலங்கியில் கறுப்புத் தன்மை, சன்னம் உட்சென்ற இடத்தில் ஏற்பட்டிருக்குமா?'' என்று நீதிபதி கேட்டபோது, மேலங்கி இருந்தால் அவ்வாறு ஏற்பட்டிருக்குமெனக் கூறினர்.

## இறந்தவரின் 'மேலங்கி

மேலங்கி பற்றி நீதிபதி கேட்டபோது, அது இரசாயனப் பகுப்பாய்வாளரிடம் அனுப்பப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட உதவிப் பொலிஸ் அதிபர் எஸ்.நவரத்தினராஜா கூறினர்.

திரு நவரத்தினராஜா சில கேள்விகளைச் சட்ட வைத்திய அதிகாரியிடம் கேட்டார்.

கேள்வி: இரண்டாவது உட்சென்ற காயமா, முதலாவது உட்சென்ற காயமா முதலில் ஏற்பட்டிருக்கவேண்டும்?

சாட்சி: முதலில் இரண்டாவது உட்சென்ற காயமும், பின்னரே முதலாவது உட்சென்ற காயமும் ஏற்பட்டிருக்கவேண்டும்.

கேள்வி: இரண்டாவது உட்சென்ற காயம் கீழே குந்தியிருந்த ஒருவர் திடீரென எழுந்து ஓடமுயலும்போது ஏற்பட்டிருக்குமா?

சாட்சி: இரண்டாவது உட்காயம் முதலில் ஏற்பட்டதும் காலமானவர் விழுந்திருக்கலாம். பின்னர் முதலாவது காயம் ஏற்பட்டிருக்கலாம்.

கேள்வி: இரண்டாவது உட்காயம் இறந்தவரின் இடது பக்கத்திலிருந்து ஏற்படுத்தப்பட்டதா?

சாட்சி! இல்லை. வலதுபக்கப் பின்புறத்திலிருந்துதான் ஏற்பட்டது. மற்றக் காயமும் அதேபோன்றுதான் வலப்பக்கப் பின்புறத்திலிருந்து ஏற்படுத்தப்பட்டது.

சாட்சி தொடர்ந்து கூறியதாவது:

## 2, 3 அடி தூரமும் ஓடியிருக்கமுடியாது

''இரண்டாவது உட்காயம் ஏற்பட்டு 2, 3 அடி தூரம்கூட அவர் ஓடியிருக்கமுடியாது. ஏனெனில் அவ்வளவு தூரம் இருதயம் பாதிக்கப்பட்டிருந்தது. அக்காயம் ஏற்பட்டபின்னர் இறந்தவர் குழறியிருக்கலாம். ஆனல் சம்பாஷித்திருக்கமுடியாது'' என்றார்.

## சகோதரர் சாட்சியம்

அடுத்து கந்தையா குணரத்தினம் (30 வயது பத்தைமேனி அச்சுவேலி) சாட்சியத்தில் கூறியதாவது:

''இறந்தவர் எனது தம்பி. திருமணமாகாதவர். எனது தாயாரும் மற்றும் திருமணமாகாத பெண் சகோதரிகளும் இறந்தவருடன் வசித்துவந்தனர். கமம்செய்வதுடன் சாரதியாகவும் அவர் இருந்தார். 12—2—82ல் ஓர் கார் வாங்கியிருந்தார். திருக்கேதீஸ்வரம் போகப்போவதாககூறிஅதற்கு முன்னர் கார் திருத்தவேண்டியுள்ளது என்று தெரிவித்து 20—1—82 மாலை 4மணிக்கு வீட்டிலிருந்து சென்றார். மறுநாள்வரை இறந்தவரை காணமல் விசாரித்தோம். இராணுவம் யாரையோ சுட்டதாகக் கேள்விப்பட்டோம் பின்னர் யாழ். ஆஸ்பத்திரி சவச்சாலையில் அவரை அடையாளம் காட்டினேன். அவர் இறந்து கிடந்த இடம் எதுவென பின்னர் எனக்குத்தெரிந்தது. அது வீட்டிலிருந்து அரைமைல் தூரத்தில் உள்ளது. இறந்த இடத்திலிருந்து அவர் சென்ற கராஜ் அரை மைல் தூரம் இருக்கும். கார் எப்போது திருத்தக் கொடுத்தது? என்ன பழுது என்பது எனக்குத் தெரியாது..

## மணிக்கூடு, மோதிரம்

''சம்பவதினம் அவர் வெள்ளைச்சாரம், மங்கல்நிற ஷேர்ட் என்பன அணிந்திருந்தார். அவர் மணிக்கூடு, மோதிரம் வழமையாக அணிந்திருப்பார். அவை அவர் இறந்த பின் இன்னும் எமக்கு கிடைக்கவில்லை. பணம் கொண்டு போனரா என்பது எனக்குத் தெரியாது'' என்றார்.

## தம்பித்துரை சாட்சியம்

முருகேசு தம்பித்துரை (28 வயது பத்தமேனி அச்சுவேலி) தமது சாட்சியத்தில் கூறியதாவது:

'இறந்தவர் எனக்கு ஒன்றைவிட்ட தம்பியார். அவர் 20.2.82 துப்பாக்கியால் சுட்டு மரணமானதாக அறிந்தேன். அவரை அதற்கு 2, 3 தினங்களுக்கு முன்னரே சந்தித்திருந்தேன். இறக்குமுன்னர் இவரை பொலிசோ, இராணுவமோ ஒருபோதும் தேடிவரவில்லை. இவருக்கு எவ்வித வழக்கும் இருக்கவில்லை' என்று கூறினர்.

## மேலும் இரு சாட்சிகள்

இறந்தவரின் நலனைக் கவனிக்க ஆஜரான சட்டத்தரணிகள் மு. திருநாவுக்கரசு, ச. கிருஷ்ணகுமார் ஆகியோர் மேலும் இரு சாட்சிகளை சாட்சியமளிக்க அழைக்கவேண்டும் என்று வாதிட்டனர். இறந்தவர் பணம்கொண்டு சென்றதை அவர்களே கூறமுடியுமாதலால் அவர்களையும் சாட்சியமளிக்க அனுமதிக்க வேண்டும் என்று வாதிட்டனர்.

உதவிப் பொலிஸ் அதிபர் திரு. எஸ். நவரத்தினராஜா கூறுகையில்; 'அரசாங்க இரசாயனப்பகுப்பாய் வாளரின் அறிக்கையையும் விரைவில் சமர்ப்பிக்குமாறு கோரியுள்ளோம். ஆகவே இந்த இரு சாட்சிகளையும் பிறிதொரு தினத்தில் சாட்சியமளிக்க அழைக்கலாம். அன்று இவர்களது சாட்சியத்துடன் அந்த அறிக்கையையும் ஆராயலாம்' என்றார்.

## விசாரணை ஒத்திவைப்பு

நீதிபதியும் அதனை ஏற்றுக்கொண்டு விசாரணையை மார்ச் மாதம் பத்தாம் திகதிக்கு ஒத்திவைத்து அன்று ஏனைய சாட்சிகளையும் விசாரணை செய்தபின்னர் தீர்ப்பை அறிவிப்பதாக கூறினர்.

பின்னர் சந்தேகநபர்களான லெப்டினன்ட் எஸ். பி. டி. சேரம் இராணுவ சிப்பாய்கள் எகநாயக்கா, கே.ஜே.சில்வா, ஆர். சி. சில்வா, ரி.டி. ஜே. ஜெயரத்ன, ஆர். எம். ஏ. ரத்னயக்கா, ரி. டி. சாள்ஸ், வாசுதேவா, ஜெயரத்ன, ரத்னயக்கா, அசோகரத்ன ஆகிரையும் அன்றைய தினம் தம்முன் கொண்டுவருமாறு நீதிபதி பணித்தார்.

## பிணையில் அனுமதி

பதினெரு இராணுவத்தினரும் நீதிபதி முன் அழைக்கப்பட்டனர். தலா 2000 ரூபா பிணையில் பதினெரு பேரையும் செல்லுமாறும், பலாலி இராணுவ முகாம் பொறுப்பதிகாரி கேர்ணல் ரி. எம். றஜிடீன் பிணையாளியாக இருந்து இவர்களை அழைத்துச் செல்ல வேண்டுமெனவும் தேவையேற்படும்போது நீதிமன்றத்தில் ஆஜராக்கவேண்டுமெனவும் நீதிபதி திரு. சீ. வி. விக்னேஸ்வரன் உத்தரவிட்டார்.

இறந்தவரின் நலனைக்கவனிக்க சட்டத்தரணிகள் மு. திருநாவுக்கரசு ச. கிருஷ்ணகுமார் ஆகியோர் ஆஜராகினர்

இராணுவ சந்தேக நபர்கள் சார்பில் சட்டத்தரணி கப்டன் திசநாயக்கா சட்டத்தரணி காப்டன் லிவேரா ஆகியோர் ஆஜராகினர்.

பொலிஸ் தரப்பில் யாழ். உதவி பொலிஸ் அதிபர் திரு. எஸ். நவரத்தினராஜா இன்ஸ்பெக்டர் கிருஷ்ணதாசன் ஆகியோர் ஆஜராகினர்.

## ஊர்காவல்......


(1ம் பக்கத் தொடர்ச்சி)

நியமிக்கப்பட்ட உபகுழுவின் அறிக்கையும் இப்பேச்சுவார்த்தையின்போது பரிசீலிக்கப்பட்டது. சில அமைச்சுக்கள் இதுதொடர்பாக விபரங்களை சமர்ப்பிக்காததால் இது பற்றி அடுத்த மாதம் 24 ம் திகதி இடம்பெறும் பேச்சுவார்த்தையின் போது தீர்மானிப்பதென்றும் முடிவு செய்யப்பட்டது.

வடபகுதிக்கான வேலைவாய்ப்பு நியமனங்களை மாவட்ட செயலாளர்களின் மூலம் விண்ணப்பங்களை கோரி, மாவட்ட அபிவிருத்தி சபை நிறைவேற்று குழுக்கள் மூலம் வழங்குவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

(இ—வெ)

National
★ நஷனல்
SONY
THE ONE AND ONLY
★ சோனி
° வர்ண ° கறுப்பு-வெள்ளை
தொலைக்காட்சிப் பெட்டிகளின்
தேர்வுக்கு
சி. சின்னத்துரை அன் பிரதர்
39, காங்கேசன்துறை வீதி -- யாழ்ப்பாணம்
தொலைபேசி, 283—284 -- தந்தி: 'கல்கி'



உங்கள் பணத்திற்கு....
25%
வட்டி...
சிறந்த பாதுகாப்பு வருமானம் உத்தரவாதம்
25% 2 வருட வைப்புப்பணத்திற்கான கால முதிர்வு வட்டி...
23% 2 வருட வைப்புப்பணத்திற்கான மாதாந்த வட்டி...
21% 1 வருட வைப்புப் பணத்திற்கான மாதாந்த வட்டி...
மகாராஜா முதலீட்டு (வரையறுக்கப்பட்ட) நிதிநிறுவனம்
122, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி: 8267

கவர்ச்சிகரமான வட்டி விகிதங்கள் 27% வரையுண்டு


| | ரு. 500க்கு அதிகமான வைப்புக்கு மாதாந்தம் வட்டி | ரு. 500க்கு அதிகமான வைப்புக்கு காலமுதிர்வு வட்டி | 1,00,000 ரூபாய்க்கு அதிகமான தொகைக்கு கால முதிர்வின்போது |
|---|---|---|---|
| 6 மாதம் | — | 18% | 21% |
| 12 மாதம் | 21% | 22% | 23% |
| 24 மாதம் | 23% | 25% | 27% |

இயக்குனர்கள்
1. திரு. ஆர். மகாராஜா (நிர்வாக இயக்குனர்)
2. திரு. ஆர். இராஜமகேந்திரன் (நிர்வாக இயக்குனர்)
3. திரு. வி. என் குமாரசாமி, F.C.A.(Eng. & Wales), ATII (Eng.) M.Inst A.M.(Eng.), AMBIM(Eng.), F.C.A.(Cey.)
4. திரு. பி. மகிந்தா B.Sc. (Hons)
5. திரு. வி. சண்முகம் LLB (Lond) Hons. A. I. B. (Lond) சட்டத்தரணி
6. திரு. டி. ஜே. குணவர்த்தன B.Sc., A.C.A., A.C.M.A
7. திரு. டபிள்யு. பலநாயக்கா MBIM (Eng.)
8. திரு. ஈ. குணசேகரா

சுருக்கமான தகவல்கள்

| நிதி அறிக்கை | 1977/78 ரூபாய் | 1978/79 ரூபாய் | 1979/80 ரூபாய் |
|---|---|---|---|
| பங்கு மூலதனம் | 4,030 | 250,000 | 250,000 |
| ஒதுக்கிய மூலதனம் | 143,588 | 246,615 | 1,706,147 |
| வைப்பு மூலதனம் | 3,579,820 | 11,325,480 | 12,139,162 |
| நிகரலாபம் (வரிகட்ட முன்) | 181,417 | 667,461 | 2,135,874 |
| நிகரலாபம் (வரிகட்டிய பின்) | 163,916 | 453,777 | 1,635,873 |
| பங்குலாபம் | | 250,000 | 187,500 |

வியாபார நோக்கங்கள்
★ முதலீட்டு வைப்பு
★ கைத்தொழிலாளர்களுக்கு, இயந்திராதிகள், மூலப்பொருள் இறக்குமதிக்கு கடன்வசதி
★ காப்புறுதி முகவர்.
ஸ்தாபகம்: 29-09-1976.
தலைமையகம்: யூனியன் பிளேஸ், கொழும்பு 2.
காரியாலயம்: 54, பாங்ஷால் வீதி, கொழும்பு.



இப்பத்திரிகை யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள ''ஈழநாடு'' லிமிட்டெட்டுக்காகயாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதி, 303 ம் இலக்கத்திலுள்ள கலாநிலைய அச்சகத்தில் 1982 ஆம் பெப்ரவரி மீ 25-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as NewsPaper. The General P.O..Sri Lanka Regd. Q.B.100236/81. P.O. Box 49, Jaffna. தொலைபேசி: 7707, 389, 8126.